Registered as a news paper.

பக்கங்கள்: பத்து


விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 ஐப்பசி 21 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 றம்ழான் 01 (07.11.2002) வியாழக்கிழமை இதழ் : 38

Soft View Computer Systems
For all your Computer Requirements
Computer Assembling & Sales
Maintenance, Repairing & Networking
Monitors, Printers, Scanners & UPS Repairing
Software Installations
CD Writing & Printing
No.778, Thaddatheru Junction,
K.K.S Road,
Jaffna,
Sri Lanka
☎ 021-2225170



நேற்றைய விபத்தில் மோதிய ஓட்டோவும் மோதுண்ட மோட்டார் சைக்கிளும்

## வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் மகனைப் பார்க்க வந்தவர் வீதி விபத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் வீதி, ஆறுகால்மடத் தடியில் நேற்று நண்பகல் ஓட்டோ-மோட்டார் சைக்கிள் விபத்தொன்று நடைபெற்றதில் மோட்டார் சைக்கிள் செலுத்தி வந்தவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் தனது 3 வயது மகனை பார்வையிட மானிப்பாயிலிருந்து யாழ்.நகர் நோக்கி வரும் போது யாழ். நகரப்பகுதியிலிருந்து வந்த ஓட்டோ ஒன்று இவருடைய மோட்டார் சைக்கிளுடன் மோதியதால் இவ் விபத்து இடம் பெற்றது.

ஓட்டோவும் மோட்டார் சைக்கிளும் எதிர்எதிரே மோதியதால் அவை இரண்டும் கடும் சேதத்திற்கு உள்ளாகின.

இவ்விபத்துச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டி வந்த கந்தையா ஜெயயோகசிங்கம் (வயது 24) என்பவர் (10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.மாவட்ட இளைஞர், யுவதிகளுக்கு சர்வதேச கம்பனிகளில் வேலைவாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள இளைஞர் யுவதிகளுக்கு சர்வதேச மட்டத்தில் இயங்கும் பல்தேசியக் கம்பனிகளில் தொழில் வாய்ப்பு கிடைப்பதற்கு வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளது.

உலகில் மிகவும் பிரபல்யமான பல்தேசியக்கம்பனிகள் பல இலங்கையிலும் கிளை நிறுவனங்களைக் கொண்டுள்ளன. இந்த நிறுவனங்களில் ஏற்படும் தொழில வெற்றிடங்களுக்கு ஊழியர்களை நியமிக்கும்போது பின்பற்றவேண்டிய புதிய நடைமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இப்புதிய நடைமுறைகளின் படி உள்நாட்டிலிருந்து அதிகளவான ஊழியர்களை இணைத்துக் கொள்வது என்றும் அத்துடன் அரச தொழில் திணைக்களத்தினூடாக விண்ணப்பிப்பவர்களை இணைத்துக் கொள்வது என்றும் மேற்படி கம்பனிகள் (10ஆம் பக்கம் பார்க்க)

## வரவு செலவுத் திட்ட வெளிப்பாடு

| | |
|---|---|
| அரசின் மொத்த வருமானம் | 43,800 கோடி ரூபா |
| அரசின் மொத்தச் செலவு | 30,400 கோடி ரூபா |
| துண்டுவிழும் தொகை | 13,400 கோடி ரூபா |

மொத்த தேசிய உற்பத்தியில் 7 வீதமாக இந்த துண்டு விழும் தொகை உள்ளது.

அரசு கடன் பெற வேண்டியுள்ள தொகை 31,600 கோடி ரூபா

# ஐ.தே.மு.அரசின் 2வது வரவு செலவுத் திட்டம் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு இல்லை!

### விண்ணாணம் விநாசியர்



அப்ப எதிர்பார்ப்போட இருந்த ஊழியற்ற பாடு திண்டாட்டந் தான்...

- புதிய நியமனங்கள் நிறுத்தம்
- வாகனங்களுக்குப் புதிய வரி
- பாதுகாப்புக்கான நிதி ஒதுக்கீட்டில் மாற்றமில்லை



(கொழும்பு)

**நேற்றுப் பாராளுமன்றில் நிதி அமைச்சர் கே.என். சொக்ஸியினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு- செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு பற்றி எதுவித அறிவிப்பும் வெளியாகவில்லை.**

ஐக்கிய தேசிய முன்னணியின் இரண்டாவது வரவு செலவுத் திட்டம் நேற்றுப் பாராளுமன்றத்தில் நிதியமைச்சர் கே.என்.சொக்ஸியினால் சமர்ப்பிக்கப்பட்டது.

இதன் மீதான விவாதம் இன்று முதல் எதிர்வரும் 15ம் திகதி வரை நடைபெறும். இரண்டாவது வாக்கெடுப்பு டிசெம்பர் 2ம் திகதி இடம் பெறும்.

நேற்றைய வரவு செலவுத் திட்டத்தின் முக்கிய விபரங்கள் வருமாறு-

### அரச ஊழியருக்கு சம்பள உயர்வு இல்லை

அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு எதுவும் உடனடியாக அமுலுக்கு வரமாட்டாது. திஸ்ஸ தெய்வேந்திரக் (10ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வன், கருணா ஹெலி மூலம் வன்னிக்கு!

(கொழும்பு)

தாய்லாந்திலிருந்து நேற்று முன்தினம் நள்ளிரவு 11.45 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்திருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மற்றும் கேணல் கருணா ஆகியோர் அடங்கிய குழுவினர் நேற்றுக்காலை வன்னிக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

கட்டுநாயக்க விமான நிலையத் (10ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாவின் படத்தைத் தாங்கியவாறு நாளை பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி

தலைவர் பிரபாகரனுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை ஆட்சேபித்து நாளை நடைபெறவுள்ள மாபெரும் கண்டனப் பேரணிக்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

நாளை நடைபெறவுள்ள இந்தப் பேரணியில் பிரதேச, நிறுவன, மற்றும் அமைப்பு ரீதியாக மக்கள், தலைவர் பிரபாகரனின் உருவப்படங்களை தாங்கியவாறும், பதாதைகள் சுலோகங்களை ஏந்தியவாறும் எழுச்சிக் குரல் எழுப்பியவாறு செல்லவுள்ளனர்.

வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவகப்பகுதிகளிலிருந்து பெருமளவில் மக்கள் இப்பேரணியில் கலந்துகொண்டு தமது உணர்வுகளை வெளிப்படுத்தவுள்ளனர். இவர்களுக்கான போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இதேசமயம்- அரச, தனியார், கல்வி, வங்கி,போக்குவரத்து அமைப்புக்களைச் சேர்ந்தோர் நாளை தமது நடவடிக்கைகளை இடைநிறுத்தி இப்பேரணியில் பங்கு பற்றுமாறு யாழ். மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுக்கொண்டுள்ளது. எமது ஆட்சேபத்தை வெளியுலகிற்கும் அரசுக்கும் தெரிவிக்கும் வகையில் இப்பேரணியில் உணர்வு (10ஆம் பக்கம் பார்க்க)

## நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து மட்டக்களப்பில் மாபெரும் பேரணி

(மட்டக்களப்பு)

விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரன் மீதான கொழும்பு மேல் நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து, அதற்கு ஆட்சேபம் தெரிவிக்கும் வகையில், நேற்று மட்டு நகரில் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது. இதில பொதுமக்கள், மாணவர்கள் என இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு பொது அமைப்புக்களின் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இப்பேரணி, காலை 9 மணிக்கு மட்டுநகர் கல்லாறு மைதானத்தில் இருந்து புறப்பட்டது. கோட்டைமுனைப் பாலத்தினூடாக நகர்ந்த பேரணி இறுதியில் காந்தி சதுக (10ஆம் பக்கம் பார்க்க)

### புத்தூர் கிணற்றிலிருந்து உருக்குலைந்த சடலம் மீட்பு

(புத்தூர்)

புத்தூர் கிழக்குப் பகுதியில் கிணற்றினுள் இருந்து உருக்குலைந்த நிலையில் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது. மரணமானவர் செநீலவாணன் (41) என அடையாளம் காணப்பட்டுள்ளார். சடலம் கிணற்றில் மிதக்கத் தொடங்கிய பின்பே இவர் மரணமான தகவல் தெரியவந்துள்ளது. (110)

SERENDIB AIRLINE
சர்வதேச சேவையில் உள்ள நாங்கள் உங்கள் உள்நாட்டுச் சேவையிலும்
(சி-148) J/FT/P - 021 - 2223916, 0777 - 801038, CMB/ 505632

## படையினரால் அகற்றப்பட்ட வேலி

கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தைச் சூழவுள்ள இராணுவ முகாம கடந்த ஞாயிற்றுக் கிழமை அகற்றப்பட்ட வேளையில் பாடசாலையின் மேற்குப்புற வேலியையும் இராணுவத்தினர் அகற்றிச் சென்றுள்ளனர்.

இதனால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கவேண்டியுள்ளதாக அதிபர் தெரிவித்தார் (60)

## வாய்த் தகராறு கத்தி வெட்டில் முடிந்தது

(புத்தூர்)

புத்தூர் வடக்குப் பகுதியில் தீபாவளியன்று மது போதை காரணமாக ஏற்பட்ட வாய்த் தகராறு இறுதியில் கத்தி வெட்டில் முடிவடைந்தது. கத்தி வெட்டிற்கு இலக்காகிய நபா அச்சுவேலி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று வருகின்றார். மேற்படி சம்பவம் பற்றி அச்சுவேலி பொலிஸ் அதிகாரிகள் விசாரணை செய்து வருகின்றனர். (110)

நிறைஞ்சனாஸ் சங்கானை
05-11-2002 தொடக்கம்
விஜய். சிம்ரன் நடித்த
துள்ளாத மனமும் துள்ளும்
காட்சி நேரம்: 11.00. 2.45. 6.00
"FINAL FIGHT"
(கராட்டிப் படம்)
சனி. ஞாயிறு மட்டும் இரவு 8.45 காட்சி
(சி-139)

ராஜா
யாழ்ப்பாணம்.



தீபாவளி வெளியீடு
அஜித் (இரட்டை வேடம்)
கிரண், மீனா நடித்த
வில்லன்
காட்சிகள்: 10.30, 2.30, 6.00, 9.30
இயக்கம்: K.S.ரவிக்குமார்.
(சி-151)

புதுப்பொலிவுடன் தங்க ஆபரணங்களை நிதானமாக பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்
கலைவாணி நகை மாளிகை
தங்கப்பவுண் நகைவியாபாரம்
111B, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்

VENKADESWARA
வெங்கடேஸ்வரா
DEALERS IN CYCLE, CYCLE SPARES
சைக்கிள், சைக்கிள் உதிரிப்பாக விற்பனையாளர்
79, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். T.P 021-2222905
கிளை
சிறி மாதவன்
97,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## இன்றைய நாள் இனிய நாள்

### 07.11.2002 - வியாழக்கிழமை

**மேடம்** :- தேகசுகக்குறைவு, பெண்களினால் பிரச்சினை, திடீர் பயணத்தால் வீண்செலவு, புதிய வேலைகள் தொடங்குவது நன்றல்ல, கல்வி முன்னேற்றம், வியாபாரம் மத்திமம்.

**இடபம்** :- மகிழ்ச்சி, ஆடையாபரண பலன், கௌரவம், தெய்வதரிசனம், கல்வி முன்னேற்றம், வியாபாரம் மத்திமம்.

**மிதுனம்** :- தேகசுகம் நன்று, மனமகிழ்ச்சி, எதிரி தலைகுனிவு, கடன் வசூல், தெய்வதரிசனம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கர்க்கடகம்** :- தேகசுகம் நன்று, எடுத்த காரியம் வெற்றி, தெய்வ சேவையில் புகழ், புத்திரர் சுகம், மகிழ்ச்சி, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**சிங்கம்** :- வீட்டில் பெண்கள் சுகயீனம், வைத்தியச்செலவு, மௌனம், எடுத்த காரியம் நிறைவேறும், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கன்னி** :- தேகசுகம் நன்று, பணவரவு, வாக்கு சாதுரியம், விருந்தினர் வருகை, தொழில் முன்னேற்றம், வியாபார மத்திமம்.

யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர்
அவர்களின் சகோதரரின் புத்திரர்
**இ.வெங்கடேச ஐயர்.**

**துலாம்** :- மனச்சஞ்சலம், பெண்களினால் சண்டை, மௌனநிலையில் இருப்பது நன்று, எடுத்த காரியம் தடை, கௌரவக் குறை, பணவரவு, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**விருச்சிகம்** :- மனமகிழ்ச்சி, உறவினர் வருகை, செய்தொழில் முன்னேற்றம், பூமி வருவாய், எதிரி தலைகுனிவு, வாகனப் பலன், தெய்வதரிசனம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**தனு** :- தேகசுகக் குறைவு, மௌனமாக இருத்தல் நன்று, செய்தொழில் மேன்மை, வாகனப் பலன், ஆடம்பரப் பொருளில் விருப்பு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மகரம்** :- மனமகிழ்ச்சி, தெய்வதரிசனம், சமய அறிஞர் உறவு, செய்தொழில் மேன்மை, பெண்களால் மகிழ்ச்சி, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கும்பம்** :- மனமகிழ்ச்சி, தெய்வ சேவையில் மதிப்பு, எடுத்த காரியம் வெற்றியடைதல், மனஅமைதி, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**மீனம்** :- மன அடக்கம், தெய்வதரிசனபலன், சமயநூல்கள் கற்றல், பிதா மகிழ்ச்சி, மரியாதை, கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

# யாழ்ப்பாணம் - மாநகரசபை

## சந்தைக் கடைகள், இறைச்சிக் கடைகள், துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம் என்பவற்றைக் குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2003.

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள சந்தைகள், இறைச்சிக்கடைகள் மற்றும் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் ஆகியவற்றை 01.01.2003 முதல் 31.12.2003 வரையான ஒருவருட காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகர ஆணையாளராகிய என்னால் 27.11.2002ந் திகதி புதன்கிழமை பி.ப 12.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் குறித்த அட்டவணையில் குறிப்பிட்டுள்ள கேள்விப் பிணைப்பணமும் கேள்விப்படிவக் கட்டணம் ரூ.300.00 (பெறுமதி சேர் வரி உட்பட) வும் செலுத்துவதன் பேரில் 26.11.2002ந் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 3.00 மணி வரையும் யாழ்.மாநகர சபையால் வழங்கப்படும் உத்தியோகபூர்வமான படிவங்களில் இணைப்பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் பெறுபவர்கள் அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்படிவங்களை யாழ்ப்பாண மாநகரசபையில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என்ற முகவரியிட்டு, அரக்கு முத்திரையிடப்பட்ட உறையிலிட்டு 27.11.2002 திகதி புதன்கிழமை பி.ப 12.30 மணிக்குப் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும். தபாலில் ஏற்படும் தாமதங்களுக்கு மாநகரசபை பொறுப்பேற்கமாட்டாது.

கிடைக்கப்பெற்ற கேள்விகள் 27.11.2002ந் திகதி புதன்கிழமை பி.ப 2.30 மணிக்கு கேள்விச்சபையினால் திறந்து பரிசீலிக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரர் அல்லது அவரது பிரதிநிதி எவரேனும் சமூகமளிக்க முடியும்.

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

1. கூட்டுறவுச்சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித்தொகையில் 50 %க்குச் சமனான தொகைக்கு அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு வங்கி உத்தரவாதமுறி சமர்ப்பித்தல் வேண்டும்.
2. சந்தைகளை குத்தகைக்குப் பெறுபவர்கள் சந்தைக்கு வரும் பொருட்களின் பெறுமதியின் மூன்று வீதத்திற்கு (3%) மேல் சந்தைவரி அறவிடக்கூடாது.
3. எக்காரணம் கொண்டும் துவிச்சக்கர வண்டிக்கு ரூபா 2.00வும், மோட்டார் சைக்கிளுக்கு ரூ.4.00வுக்கும் மேலதிகமாக பாதுகாப்புக்கட்டணம் அறவிடக்கூடாது.
4. தங்களால் கோரப்படும் கேள்வித்தொகைக்கு மேலதிகமாக 20% பெறுமதி சேர் வரி (வற்) செலுத்தப்படல் வேண்டும்.
5. இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகளுக்கு விலை மதிப்புத் திணைக்களத்தால் நிர்ணயிக்கப்பட்ட வாடகைத்தொகையை ஒவ்வொரு மாதமும் செலுத்துதல் வேண்டும்.

அட்டவணை

| சந்தைகள் | மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணைப்பணம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (பெறுமதி சேர் வரி நீங்கலாக) |
|---|---|---|
| 1. பெரியகடை மரக்கறிச்சந்தை | 5000/- | 358000.00 |
| 2. கொட்டடி/ பண்ணை மீன் சந்தை | 5000/- | 1760000.00 |
| 3. குருநகர்ச் சந்தை | 5000/- | 661000.00 |
| 4. செங்குந்தாச் சந்தை | 5000/- | 463500.00 |
| 5. நாவாந்துறைச் சந்தை | 2500/- | 67000.00 |
| 6. பாஷையூர்ச் சந்தை | 2500/- | 40000.00 |
| 7. புங்கன்குளம் | 2500/- | 15000.00 |

**துவிச்சக்கரவண்டிப் பாதுகாப்பு நிலையம்**

| | | |
|---|---|---|
| 1. கஸ்தூரியார் வீதி துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் | 2500/- | 30000.00 |

| இறைச்சிக்கடைகள் | இல. மீளளிக்ககூடிய கேள்விப்பணம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (பெறுமதி சேர் வரி) |
|---|---|---|
| 01. கொட்டடி ஆட்டிறைச்சிக்கடை-1 | 2500/- | 28000.00 |
| 02. கொட்டடி ஆட்டிறைச்சிக்கடை-2 | 2500/- | 37000.00 |
| 03. கொட்டடி ஆட்டிறைச்சிக்கடை-3 | 2500/- | 39700.00 |
| 04. கொட்டடி ஆட்டிறைச்சிக்கடை-4 | 2500/- | 29000.00 |
| 05. கொட்டடி ஆட்டிறைச்சிக்கடை-5 | 2500/- | 23000.00 |
| 06. கொட்டடி ஆட்டிறைச்சிக்கடை-6 | 2500/- | 22000.00 |
| 07. கொட்டடி ஆட்டிறைச்சிக்கடை-7 | 2500/- | 40900.00 |
| 08. கொட்டடி ஆட்டிறைச்சிக்கடை-8 | 2500/- | 22000.00 |
| 09. நரிக்குன்று மாட்டிறைச்சிக்கடை-1 | 5000/- | 171000.00 |
| 10. செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை-1 | 2500/- | 33300.00 |
| 11. செங்குந்தா ஆட்டிறைச்சிக்கடை-2 | 2500/- | 29000.00 |
| 12. குருநகர் மாட்டிறைச்சிக்கடை-1 | 5000/- | 128200.00 |
| 13. குருநகர் மாட்டிறைச்சிக்கடை-2 | 2500/- | 70000.00 |
| 14. குருநகர் மாட்டிறைச்சிக்கடை-3 | 2500/- | 85000.00 |
| 15. குருநகர் மாட்டிறைச்சிக்கடை-4 | 2500/- | 55700.00 |
| 16. குருநகர் மாட்டிறைச்சிக்கடை-5 | 2500/- | 52700.00 |
| 17. குருநகர் மாட்டிறைச்சிக்கடை-6 | 2500/- | 82500.00 |
| 18. குருநகர் ஆட்டிறைச்சிக்கடை-7 | 2500/- | 9000.00 |
| 19. பாசையூர் மாட்டிறைச்சிக்கடை-1 | 2500/- | 48500.00 |
| 20. பாசையூர் மாட்டிறைச்சிக்கடை-2 | 2500/- | 35500.00 |
| 21. புங்கன்குளம் மாட்டிறைச்சிக் கடை -1 | 2500/- | 25000.00 |
| 22. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை-1 | 2500/- | 34700.00 |
| 23. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை-2 | 2500/- | 12000.00 |
| 24. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை-3 | 2500/- | 17000.00 |
| 25. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை-4 | 2500/- | 8000.00 |
| 26. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை-5 | 2500/- | 9000.00 |
| 27. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை-6 | 2500/- | 6000.00 |
| 28. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை-7 | 2500/- | 9700.00 |
| 29. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை-8 | 2500/- | 5500.00 |
| 30. நாவாந்துறை மாட்டிறைச்சிக் கடை-9 | 2500/- | 5500.00 |
| 31. நாவாந்துறை ஆட்டிறைச்சிக்கடை10 | 2500/- | 5500.00 |
| 32. நாவாந்துறை கருவாட்டுக்கடை -11 | 1000/- | 3500.00 |
| 33. நாவாந்துறை கருவாட்டுக்கடை -12 | 1000/- | 3500.00 |

முக்கிய குறிப்பு:- கேள்விக்காரர்களால் சமர்ப்பிக்கப்படும் கேள்வித்தொகையுடன் மேலதிகமாக பெறுமதிசேர் வரியாக 20 வீதத்தையும் சேர்த்துச் செலுத்துதல் வேண்டும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும். அத்துடன் தனியார் காணிகளில் எதுவித இறைச்சிக்கடைகளுக்கும் அனுமதி வழங்கப்பட மாட்டாது என்பதையும் அறியத்தருகின்றேன்.

**இ.இராமலிங்கம்,**
**மாநகர ஆணையாளர்,**
**யாழ்ப்பாணம்.**

**மாநகரசபை அலுவலகம்,**
**யாழ்ப்பாணம்.**
**2002.11.05.**

(சி-159)

# இந்திய மீனவர்களின் நுழைவைத் தடுக்க விடுதலைப் புலிகளிடமும் ஆலோசனை!

## மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த விஜேசேகர அறிவிப்பு

(கொழும்பு)

இந்திய மீனவர்கள் இலங்கையின் கடல் எல்லைக்குள் நுழைந்து, சட்டவிரோதமாக மீன்பிடித்துச் செல்வதைத் தடுப்பதற்காக - விடுதலைப் புலிகளின் ஆலோசனையும் பங்கேற்பும் பெறப்படவிருப்பதாக - மீன்பிடித துறை அமைச்சர் மகிந்த விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இதற்காக - இரண்டு விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுட்பட 15 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்த அவர் - இந்திய மீனவர்கள் சட்டவிரோத மீன்பிடித்தலைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக இக்குழு ஆராயும் என்றும் கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

இலங்கையைச் சூழவுள்ள கடற்பகுதியில் கண்காணிப்பை வைத்திருக்கவும், சட்டவிரோத மீன்பிடித்தலைத் தடுக்கவும் கடற்படையால் மட்டும் முடியாது. இதற்கு வலுமிகுந்த கரையோரப் பாதுகாப்புப்படை ஒன்றும் வேண்டும். இந்தக் கரையோரப் பாதுகாப்புப் படைக்கு, ஆகக்குறைந்தது இரண்டு அதிவேகப் படகுகளும், ஹெலிகொப்ரர் ஒன்றும் தேவைப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

### தாய்வான் கண் மருத்துவர் குழு யாழ்ப்பாணத்திற்கு!

(நமது நிருபர்)

தாய்வான் மருத்துவர் குழுவொன்று, கண் சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ளும் நோக்கில் எதிர் வரும் 11 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளது.

தாய்வானைச் சேர்ந்த 20 கண் சத்திரசிகிச்சை நிபுணர்களே இங்கு வருகைதரவுள்ளனர். இவர்கள் கண்ணில் வெண்படலங்களை சத்திர சிகிச்சை மூலம் அகற்றுகின்ற சிகிச்சைகளை நோயாளர்களுக்கு வழங்கவுள்ளனர்.

இங்கு இவர்கள் தங்கியிருக்கும் காலத்தில் சுமார் 200 இற்கும் அதிகமான சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

# ஆரியகுளம் சந்தியில் சைக்கிள் உரிமத்தகடு பரிசோதனை!

## அதிகாரிகள் திடீர் நடவடிக்கை


(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை அதிகாரிகள் ஆரியகுளச் சந்தியில் துவிச்சக்கரவண்டி உரிமத் தகட்டுப் பரிசோதனையில் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை 9 மணியிலிருந்து மதியம்வரை இப் பரிசோதனையில் அவர்கள் ஈடுபட்டனர். இவ்வீதி வழியாக துவிச்சக்கர வண்டியில் பயணம் செய்தோர் அனைவரும் மாநகரசபை அதிகாரிகளால் வீதியில் மறிக்கப்பட்டு இப்பரிசோதனைக்குட்படுத்தப்பட்டனர்.

துவிச்சக்கர வண்டி உரிமத்தகடு இதுவரை பெறாதோர் அவ்விடத்தில் வைத்தே உரிமத் தகட்டைப் பெறும்படி அறிவுறுத்தப்பட்டனர்.

அலுவலகங்களுக்கு, கல்வி நிலையங்களுக்கு, வெவ்வேறு தொழில் துறைகளுக்கு செல்வோர், பெண்கள் என அனைவரும் வழிமறிக்கப்பட்டு துவிச்சக்கரவண்டி உரிமத் தகட்டுப் பரிசோதனைக்குட்பட்டதால் அப் பகுதியில் பெரும் சனக்கூட்டமாக காணப்பட்டது. (லி)



ஆரியகுளச் சந்திப் பகுதியில் நேற்றுக்காலை யாழ்.மாநகர சபை அதிகாரிகள் துவிச்சக்கரவண்டி உரிமத்தகடு பரிசோதனையில் ஈடுபட்ட போது எடுக்கப்பட்ட படம். (படம்:- லிவிங்ஸ்டன்)

# வட-கிழக்கில் பெரியளவில் மாவீரர் தின ஏற்பாடுகள்!

## துரிதமாகப் புனரமைக்கப்படும் துயிலும் இல்லங்கள்

(யாழ்ப்பாணம்)

இவ்வருட மாவீரர் தினத்தை பெரியளவில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் வட-கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ்.குடாநாட்டில் கோப்பாய், கொடிகாமம், தீவகம் மற்றும் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லங்களைப் புனரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அம்பாறை - கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் இம்முறை புதிதாக மாவீரர்தின எழுச்சி நிகழ்வுகள் நடைபெற இருப்பதால் நாளாந்தம் 200 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் இப்பகுதியில் சிரமதானப் பணிகளைச் செய்து வருகின்றனர்.

வவுனியா மாவட்டத்தில் படையினரால் சேதமாக்கப்பட்ட ஈச்சக்குளம் மாவீரர் துயிலும் இல்லமும் துரிதமாக புனரமைக்கப்பட்டு வருகிறது.

இது போன்று மட்டக்களப்பு, திருமலை ஆகிய இடங்களிலும் மாவீரர் தினத்தை பெரியளவில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன. இவ் ஏற்பாடுகளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் பணிமனையுடன் பொது அமைப்புக்கள் பலவும் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இளம் பெண் படுகொலையைத் தொடர்ந்து அச்சத்தினால் மூடப்பட்டது பாடசாலை!

## மீளத் திறக்குமாறு வவுனியா மக்கள் கோரிக்கை

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்திலுள்ள கல்நாட்டிய குளம் பாடசாலையை மீளவும் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என, அப்பகுதி மக்களால் மனித உரிமைகள் ஆணைகுழுவின் வவுனியா அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சில வாரங்களுக்கு முன்னர் இப்பகுதியில் பெண் ஒருவர் இனந்தெரியாத நபர்களால் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டதை அடுத்து, கல்நாட்டிய குளம் பாடசாலை இரு வாரங்களுக்கு மேலாக செயலிழந்து போயிருக்கிறது.

சுமார் 56 பிள்ளைகள் கல்வி கற்கும் இப்பாடசாலைக்கு, கடந்த வாரம் 8 மாணவர்கள் மட்டுமே வந்திருந்தனர். இதனால் மாணவர்களின் பாதுகாப்பை உறுதிசெய்து - பாடசாலையை மீள இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என மனித உரிமைகள் ஆணைக் குழுவின் வவுனியா அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் - பாடசாலை நிர்வாகம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பொலிசாரை உள்ளடக்கியதான கூட்டம் ஒன்றுக்கு ஒழுங்குபடுத்தி வருகின்றது.

தமது கிராமத்தில் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்றும், பெண்ணின் படுகொலையுடன் சம்பந்தப்பட்டோர் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் கோரி, கல்நாட்டிய குளம் பகுதி மக்கள் கடந்த வாரம் பேரணி ஒன்றை நடத்தியிருந்தமை தெரிந்ததே. (01)

# தடுத்து நிறுத்திய சூத்திரதாரி யார் என்பதை கண்டறியும்வரை நாடாளுமன்றைப் பகிஷ்கரிப்பேன்

## மட்டு. மாவட்ட எம்.பி. கிருஷ்ணபிள்ளை

மாவட்ட அபிவிருத்திச் சபைக் கூட்டத்துக்கு செல்ல விடாமல் தடுத்த இராணுவத்தினர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, அது குறித்து தனக்கு அறிவிக்கும் வரை பாராளுமன்ற அமர்வுகளை பகிஷ்கரிக்கப் போவதாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞா. கிருஷ்ணபிள்ளை தெரிவித்துள்ளார்.

கடந்தமாதம் மட்டக்களப்பு செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைக்கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்ற, பாராளுமன்ற உறுப்பினர் கிருஷ்ணபிள்ளை மீது செயலகத்திற்குள் செல்வதற்கு இராணுவத்தினர் அனுமதி வழங்கவில்லை. இது குறித்து பிரதமர், பாதுகாப்பு அமைச்சர், இராணுவத் தளபதி ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்தச் செயலின் பின்னணியில் உள்ளவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இதனால் உண்மையான சூத்திரதாரி மீது நடவடிக்கை எடுக்கும் வரை பாராளுமன்றத்துக்குச் செல்லப்போவதில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வரவு-செலவுத் திட்டத்துக்கு கூட்டணி ஆதரவளிக்கும்!

## - ஆனந்தசங்கரி தெரிவிப்பு -

(நமது நிருபர்)



ஐ.தே.க. முன்னணி அரசாங்கத்தின் 2003ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்துக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி பூரண ஆதரவை வழங்கும் என்று கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்த சங்கரி தெரிவித்துள்ளார்.

ஐ.தே.மு.அரசாங்கம் சமாதான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றது. வட-கிழக்குத் தமிழரின் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு காணும் நோக்கிலேயே அரசாங்கம் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்து வருகின்றது.

இதனால் அரசாங்கத்துக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி ஆதரவளிக்க வேண்டிய கடமைப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

சமாதானப் பேச்சுக்கள் இதுவரை வெற்றிகரமாகவே சென்று கொண்டிருப்பதால் அரசாங்கத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு கூட்டணிக்கு இருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.

# சமுர்த்தி தொகைக் குறைப்பை நிரூபித்தால் உடனடியாகப் பதவியிலிருந்து விலகிவிடுவேன்!

## என்கிறார் ஜனாதிபதி சந்திரிகா



(கொழும்பு நிருபர்)

சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்து சமுர்த்தி உதவித் தொகையை 25 சதவீதத்தால் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருப்பதாக வெளியான தகவல்களை நிரூபித்தால் தாம் பதவி விலகத் தயார் என ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியமும் ஜனாதிபதி சந்திரிகாவும் சமுர்த்தி உதவித் தொகையினை 25 சதவீதத்தால் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக சமுர்த்தி அமைச்சர் ஆர். ஏ.சிறிசேன குற்றஞ் சாட்டியிருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும்போதே, இவ்வாறானதொரு செயலை யார் நிரூபித்தாலும் தான் உடனடியாகப் பதவி விலகிவிடுவேன் என ஜனாதிபதி சந்திரிகா கூறியுள்ளார். (01)

### சாயி நிலையத்தில் பஜனை

(யாழ்ப்பாணம்)

நாச்சிமார் கோவிலடி யாழ்ப்பாணத்திலுள்ள பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா நிலையத்தில் 10ஆம் திகதி மாலை 3மணிக்கு நடைபெறவுள்ள பஜனை நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்கும்படி - பிரசாந்தி நிலையத்தினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் விசாரணையில் கடற்படை அதிகாரி

(கொழும்பு)

கடற்படையின் உயர் மட்ட அதிகாரி ஒருவர் தொடர்பாக, லஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பிட்ட கடற்படை உயரதிகாரி நிதி மோசடிச் செயல்களுடன் தொடர்புபட்டதாகச் சந்தேகத்தின் பேரில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் லஞ்ச ஊழல் ஆணைகக்குழுவின் அதிகாரிகள், கடற்படைத் தலைமையத்திலிருந்து விசாரணையுடன் தொடர்புடைய சில ஆவணக் கோப்புக்களைத் தம் பாதுகாப்பில் எடுத்துள்ளனர்.

இந்த ஆவணக் கோப்புகள் கடற்படை அதிகாரிகளுக்கான உத்தியோகபூர்வ வாசஸ்தல நிர்மாண ஒப்பந்தம் மற்றும் சில வாகனங்களின் கொள்வனவுடன் சம்பந்தப்பட்டதெனத் தெரியவருகின்றது.

# ஆங்கில, தகவல் தொழிநுட்பக் கல்வியை மேம்படுத்த உலக வங்கி உதவியுடன் திட்டம்!

## கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு அறிவிப்பு

(கொழும்பு)

உலக வங்கியின் உதவியுடன் ஆங்கில, தகவல் தொழில்நுட்பக் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

அண்மைக் காலத்தில் நடத்தப்பட்ட க.பொ.த (சா/த) பரீட்சைகளில் பெருமளவிலான மாணவர்கள் ஆங்கிலத்தில் சித்தியடையாததையடுத்தே அரசாங்கம் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளது.

1994ஆம் ஆண்டு 56.9 சதவீதமான மாணவர்கள் ஆங்கிலத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெறவில்லை. இது 2001 ஆம் ஆண்டில் 66.8 சதவீதமாக அதிகரித்திருக்கின்றது.

இதனால் நாட்டின் கல்வி நிர்வாகம் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. அரசியல் தலையீடுகள் காரணமாகவே இந்த மோசமான நிலை ஏற்பட்டது எனவும் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு மேலும் தெரிவித்திருந்தார்.

கண்டி தர்மராஜ மகா வித்தியாலயத்தில் நடந்த நிகழ்ச்சி ஒன்றிலேயே கல்வி அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதே பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க- அதிபர்கள், ஆசிரியர்கள் வகுப்புக்குச் சமுகமளிக்காவிட்டால் மாணவர்களைச் சத்தியாக்கிரகம் செய்யுமாறு கூறியிருந்த கருத்தைத் தாம் ஏற்க முடியாதென அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.

# அதிரடிப்படை - புலித் தளபதிகள் சனிக்கிழமையன்று சந்திப்பு!

(அம்பாறை)

பொலிஸ் அதிரடிப்படையின் ஆணையிடும் அதிகாரி - பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிமால் குணதிலக, புலிகளின் கிழக்குப் பகுதி தளபதிகளை எதிர்வரும் 9ஆம் திகதி சந்திக்கவுள்ளார்.

இந்தச்சந்திப்பு போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் இடம்பெறவிருக்கின்றது.

கிழக்கிலங்கையின் பாதுகாப்பு பிரச்சினைகள் பற்றி இருதரப்பும் கலந்துரையாட இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

# தெல்லிப்பழை ப.நோ.கூ.சங்கத் தேர்தல் ஆறு கிளைக்குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டன!

(வலி.வடக்கு)

தெல்லிப்பழை பல நோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் 8 கிளைகளுக்கு நடைபெற்ற கிளைக்குழுத் தேர்தலில் 6 கிளைக் குழுக்களின் தெரிவு இடம்பெற்றுள்ளது. எஞ்சிய இரு கிளைகளுக்கும் கோரம் இல்லாமையால் தெரிவு இடம்பெறவில்லை.

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் 42 கிளைகளுக்கான கிளைக்குழுத் தேர்தல் ஏற்கனவே இடம்பெற்ற சமயம் 34 கிளைக்குழுக்கள் தெரிவாகி - ஏனைய 8 கிளைக்குழுக்களுக்கும் கோரம் இல்லாமையால் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

தேர்தல் ஒத்திவைக்கப்பட்டிருந்த 8 கிளைகளுக்கும் மீண்டும் தேர்தல் இடம்பெற்ற சமயம் 6 கிளைக்குழுக்கள் தெரிவுசெய்யப்பட்டன. 20 ஆம் இலக்க வசாவிளான் கிளைக்கும், 33 ஆம் இலக்க மாவிட்டபுரம் மடத்தடிக் கிளைக்கும் கோரம் இல்லாமையால் தேர்தல் இடம்பெறவில்லை.

மொத்தம் 40 கிளைக்குழுக்களின் தெரிவுகள் பூர்த்தியாகியுள்ளதால் இவற்றின் ஊடாக தெரிவு செய்யப்படும் பொதுச்சபை உறுப்பினர்களைக் கொண்டு நெறியாளர் சபை தெரிவுசெய்யப்படலாம் என எதிர்பாக்கப்படுகிறது.

தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கத்தைப் பொறுத்தவரை அதன் எல்லைப்பரப்பினுள் மக்கள் முழுமையாக மீளக்குடியமராத நிலையிலும் சங்க அங்கத்தவர்கள் இடம்பெயர்ந்து பல்வேறு பகுதிகளில் வசிக்கும் நிலையிலும், இம்முறை புதிய விதிகளின் கீழ் முதற்தடவையாக தேர்தல்கள் இடம்பெற்ற நிலையிலும், குறிப்பிடத்தக்க அளவில் வெற்றிகரமாக தேர்தல்கள் நடைபெற்றதாக சங்கத்தில் ஈடுபாடுடைய கூட்டுறவாளர்கள் தெரிவிக்கின்றனர்.

(105)

# இயக்கச்சிப் பாடசாலைக்கு தற்காலிக வகுப்பறைத் தொகுதி

## கல்வி மேம்பாட்டுப் பேரவை ஏற்பாடு

(சரசாலை)

பளை-இயக்கச்சி அரசினர் தமிழ் கலவன் பாடசாலைக்கு 100 அடி நீளமான தற்காலிக வகுப்பறைத் தொகுதி ஒன்று தமிழீழ கல்விமேம்பாட்டு பேரவையினால் அமைக்கப்படவுள்ளது.

1990 ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த இப்பாடசாலை ஜனவரிமாதம் சொந்த இடத்தில் மீள இயக்கப்படவுள்ளதோடு கடந்தகால யுத்த அனர்த்தங்களின் போது இப்பாடசாலைக் கட்டடம் முற்றாக சேதமடைந்தமையும் குறிப்பிடத்தக்கது. (34)

# கால்நடைகளின் வசிப்பிடமாகும் ஊரெழுப் பாடசாலை

(ஊரெழு)

ஊரெழு கணேசா அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின்- வகுப்பறைக் கட்டடத்தினுள் இரவு வேளைகளிலும் மற்றும் விடுமுறை நாட்களிலும் பாடசாலையை அண்டிய பகுதிகளில் வாழும் பொது மக்கள்- தமது கால்நடைகளைக் கட்டி வருகின்றனர்.

இதனால் வகுப்பறை அசுத்தமாவதுடன் துர்நாற்றமும் வீசி வருவதனால்- மாணவர்கள் தமது கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாமல் இருப்பதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

(96)

# புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுக்கூட்டம் யாழ்.நகரில்

(சிறுப்பிட்டி)

புதிய ஜனாயகக் கட்சியினால் நாளைமறுதினம் 9 ஆம் திகதி பி.ப 3.30 மணிக்கு- யாழ். சிற்றி ஹோலில் பொதுக்கூட்டமொன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் தலைமையில் இக்கூட்டம் நடைபெறவுள்ளது.

நிரந்தர சமாதானத்தை நோக்கிய பேச்சுவார்த்தை, உரிமை அடிப்படையிலான தீர்வை வலியுறுத்துதல, அந்நிய நலன்களுக்காக தலையீடுகளை நிராகரித்தல் போன்றவற்றை வலியுறுத்துவதற்காகவே இப்பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில் தேசிய அமைப்பாளர் சட்டத்தரணி தம்பையா, அரசியற்குழு உறுப்பினரும் சட்டத்தரணியுமான தேவராஜா, மற்றும் மலையகத்தின் மத்திய குழு உறுப்பினர் பன்னீர்ச் செல்வம் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (78)

### பளை மத்திய கல்லூரி மாணவருக்கு!

கிளி/பளை மத்திய கல்லூரி மூலமாக க.பொ.த.சாதாரணப் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் தற்போது கல்வி கற்கும் பாடசாலையிலிருந்து- தரம்-10 மூன்றாந் தவணையும், தரம்-11 முதலாம், இரண்டாம் தவணைக்குமுரிய கணிப்பீட்டுக் புள்ளிகளை 12 ஆம் திகதிக்கு முன்னராக ஒப்படைக்குமாறும்,

2003 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள - கலை, விஞ்ஞானப் பிரிவு மாணவர்களும் - பரீட்சைக்கான விபரங்களை 12 ஆம் திகதிக்கு முன்னராக பதிவு செய்யுமாறும் கல்லூரி அதிபர் கே.குணபாலசிங்கம் அறிவித்துள்ளார்.

### அச்செழு பகுதிக்கு பேருந்து சேவை

(ஊரெழு)

நீர்வேலி, அச்செழு பகுதி மக்களுக்கான பேருந்து சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. படையினரால் தடைசெய்யப்பட்டிருந்த அச்செழு-நீர்வேலி வீதி அண்மையில் திறந்து விடப்பட்டதையடுத்து நேற்று முன்தினம் முதல் பேருந்து சேவை இடம்பெற்று வருகின்றது.

(96)

### சாவகச்சேரி துர்க்கையம்மன் பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி அருள்மிகு ஸ்ரீ துர்க்கை அம்பாள் தேவஸ்தான பாலஸ்தாபன கும்பாபிஷேகம் 10ம் திகதி காலை 11.38ற்கு நடைபெறவுள்ளது.

கடந்த கால யுத்த அனர்த்தங்களில் பாதிப்படைந்த இவ்வாலயத்தில் பலவருடங்களாக நித்திய பூஜைகளும் நடைபெறாமல் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

### கைதடிப் பாலத்தில் மீண்டும் முட்கம்பி வேலி

(சாவகச்சேரி)

கைதடிப் பாலத்தினைச் சுற்றி இராணுவத்தினரால் முட்கம்பி வேலிகள் மீள அமைக்கப்பட்டுள்ளன.

அண்மையில் படையினரால் இப்பகுதியிலுள்ள மிதிவெடிகள் அகற்றப்பட்ட போது - இவ்வேலிகளும் அப்புறப்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(29)

### சாயி நிலையத்தில் பஜனை

உலகில் சாந்தியும், சமாதானமும், சுபீட்சமும் நிலவவும் மனித மேம்பாடுகள் மிளிரவும் வேண்டி 9ம் திகதி தொடக்கம 10ம் திகதி மாலை 6மணி வரை- யாழ் பகவான்ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் பஜனை நடைபெறவுள்ளது.

இபஜனை நிகழ்வானது உலகெங்கிலுமுள்ள 7000ற்கும் மேற் பட்ட சாயிசேவா நிலையங்களிலும் நடைபெறவுள்ளது குறிப்பித்தக்கது.

### 'துலக்கம்' நூல் இன்று வெளியீடு

புங்குடுதீவு மகாவித்தியாலயத்தின் 'துலக்கம்' நூல் வெளியீட்டு விழா இன்று காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். அதிபர் தர்மகுணசிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக தீவக வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்துகொள்கிறார்.

**அவசர காலச்சட்டம் நீங்கிய நிலையில்**

# வட. - கிழக்கு இணைப்பு இனிச் செல்லுபடியாகாது!

## தினேஷ் குணவர்த்தன

(கொழும்பு)

அவசரகாலச் சட்டத்தின்கீழ் ஒன்றிணைக்கப்பட்ட வட-கிழக்கு மாகாணங்கள், அவசரகாலச் சட்டம் காலாவதியாகிவிட்ட நிலையில் எவ்வாறு ஒன்றிணைந்திருக்க முடியும் என மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவரும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான தினேஷ் குணவர்த்தன கேள்வி எழுப்பியுள்ளார்.

இதனால் கிழக்கு மாகாணத் திற்குத் தனியான ஆளுனர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் என தேசிய கூட்டமைப்புப் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது. பேரவையின் பிரதான அமைப்பாளரான தினேஷ் குணவர்த்தன, இந்தக் கோரிக்கையைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியோரிடம் முன்வைத்துள்ளார் எனவும் தெரிய வருகின்றது.

# பனம் பொருள் உற்பத்திக்கென 5 லட்சம் செலவில் புதிய தொழிற்சாலை

(வலி.வடக்கு)

தெல்லிப்பழை தெங்கு பனம் பொருள் உற்பத்தி, விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் - தொழில் முயற்சிகளை விஸ்தரிக்கும் நோக்கில் 5 லட்சம் ரூபா செலவில் தொழிற்சாலை ஒன்றை அமைக்கவுள்ளது.

தனது சொந்த நிதி வளத்தைப் பயன்படுத்தி தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்காக - காணி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இத்தொழிற்சாலைக்கான வேலைகள் பூர்த்தியாகி இயங்க ஆரம்பித்தால், குறிப்பிட்ட சில மாதங்களில் அதிகமாக உற்பத்தியாகும் கள்ளைச் சேமித்து வெல்லம் தயாரிக்கவும், போத்தலில் அடைத்து பயன்படுத்தவும் முடியுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (105)

**வலி. வடக்கில்**

# ஐந்தாயிரம் பனம் விதைகளை நடுகை செய்து பராமரிக்க ஏற்பாடு

(வலி.வடக்கு)

வலி.வடக்கு, தெல்லிப்பழை தெங்கு பனம் பொருள் உற்பத்திக் கூட்டுறவுச் சங்கம் "கற்பகச் சோலை" திட்டத்தின் கீழ் 5 ஆயிரம் பனம் விதைகளை நாட்டி அவற்றை வளர்த்தெடுக்க முன்வந்துள்ளது.

மல்லாகம் சப்பட்டி மயான சுற்றாடலில் உள்ள தரிசு நிலத்திலும் மற்றும் அளவெட்டி, கேணிப்பிட்டி மயான சுற்றாடலில் உள்ள தரிசு நிலத்திலும் இப்பனம் விதைகள் நாட்டப்படவுள்ளதாக சங்கப் பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார்.(105)

# சாவற்கட்டு முன்பள்ளியை வெளிநாட்டு நிறுவனம் பொறுப்பேற்கும்

(சுதுமலை)

சாவற்கட்டு முன்பள்ளி 104 மாணவர்களுடன் இயங்கி வருகின்றது. இம் மாணவர்களுக்கு காலணி, கற்றல் உபகரணங்கள், போசாக்குணவு என்பன இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது.

இந்தச் செயற்திட்டத்தை ஆர்.ஆர்.ஆர் என்ற வெளிநாட்டு நிறுவனம் பொறுப்பேற்கவுள்ளது. அதற்கான நிதியையும் விரைவில் வழங்கவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

(91)

# திடற்புலம் பாலர் பாடசாலைக்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பு

(புன்னாலைக்கட்டுவன்)

திடற்புலம் பகுதியுள்ள "ஒளி நிலா" பாலர் பாடசாலைக்கு நிரந்தர கட்டடம் அமைக்கப்பட்டு வருகிறது.

இதற்கான நிதியினை வலி. தெற்கு பிரதேச சபையும் இப்பகுதி நலன் விரும்பிகளும் வழங்கியுள்ளனர்.

நீண்ட காலமாக கட்டட வசதிகளற்ற நிலையிலும் - திறம்பட இந்த முன் பள்ளி இயங்கிவந்தமை குறிப்பிடத்தக்கது.

# தொழில் நுட்பக் கல்லூரிக்கு விரிவுரையாளர்கள் விண்ணப்பிக்கலாம்

(ஊரெழு)

யாழ்.தொழில் நுட்பக் கல்லூரியில் பகுதி நேர விரிவுரையாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அடுத்த ஆண்டு ஆரம்பமாகவுள்ள புதிய கற்கை நெறிகளைப் போதிப்பதற்கான விரிவுரையாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டே - விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. (96)

# மோட்டார் சைக்கிளில் சென்றவர் நாயுடன் மோதிப் படுகாயம்

(சரசாலை)

வீதியால் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுக்கு குறுக்கே நாய் ஒன்று பாய்ந்ததால், மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்தவர் தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்த சம்பவமொன்று நேற்று சங்கத்தானையில் இடம்பெற்றது.

இச் சம்பவத்தில் சாவகச்சேரி சிவன் கோவிலடியைச் சேர்ந்த தி.தங்கராசா (வயது 49) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (34)

# தெல்லிப்பழை வைத்தியசாலையில் பெயர்ப்பலகைகள் மாயம்


(பன்னாலை)

தெல்லிப்பழை வைத்தியசாலையில் நோயாளர்களால் இலகுவாக இனங்காணக்கூடிய வகையில் போடப்பட்டிருந்த - இரண்டு பெயர்ப் பலகைகள் இனந்தெரியாதோரால் அகற்றப்பட்டுள்ளன.

பற்சிகிச்சை நிலையம், ஊசிபோடும் இடம் ஆகியவற்றைக் காட்டும் பெயர்ப்பலகைகளே இவ்வாறு அகற்றப்பட்டுள்ளன.

(72)

# அதி வீச்சுடையதான நிர்வாகத்திறனை முகாமையாளர்கள் பேணுவது எவ்வாறு?



சில முகாமையாளர்கள் மாத்திரந்தான் நோக்கம் நிறைந்த பண்புடன் தொழிற்படுகின்றனர். எஞ்சியவர்கள் தங்களுடைய நேரத்தையும் சக்தியையும் வீணாக்குகின்றனர் என ஆராய்ச்சி வெளிப்படுத்துகின்றது. இலங்கையிலுள்ள முகாமையாளர்கள் கூட விடயங்களைச் செய்து முடிப்பதில் தொடர்பாடற்திறன் குறைந்தவர்களாகவுள்ளனர், அத்தோடு காலங்கடத்துதல் போன்ற எதிர் மறைச் சிந்தனை மனப்பாங்கையும் அடிக்கடி வெளிக்காட்டுகின்றனர். போரினால் நாசமாக்கப்பட்ட இத்தீவில் மோதல்களினால் ஏற்படுத்தப்பட்ட துன்பங்களை ஒருவர் பரிசீலிக்கும் பொழுது அத்தகைய நடத்தைகளுக்காக இங்குள்ள மக்களைக் குறை கூறமுடியாது.

இவை உத்தரவு பெற்ற நரம்பு சார் மொழியியல் நிகழ்ச்சித் திட்டப் பயிற்சியாளர் (Neuro Linguistic programming Trainer) (NLP) டாக்டர் பேர்னில்லெ நூட்ஸனின் (Dr. Penille Knudtzon) கருத்துக்களாகும். அவர் இலங்கையில் வர்த்தகர்கள், உத்தியோகர்கள், விளையாட்டு வீரர்கள் மற்றும் பெண்களுக்கு (NLP) என்.எல்.பி. நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார்கள்.

ஊக்குவித்தல் திறன் (Motivation skills), இலக்கு ஒழுங்கமைத்தல் (Goal setting) முகாமைத்துவம் தொழில் செயற்பாடும் (work performance) உற்பத்தியும், கற்றல் மற்றும் அழுத்தக்கட்டுப்பாடு (stress control) ஆகியவற்றை அதிகரிப்பதற்கான ஆயுதங்களை (NLP) என்.எல்.பி வழங்குகின்றதென அவர் விளக்கினார்.

"இவை எல்லாவற்றிற்கும் NLP கருவிகளை வைத்திருப்பது மட்டுமன்றி, அதிக நம்பிக்கையுடனும், உள்ளுறை பெறுமானங்களை கண்டறிந்தும் மனிதர் என்ற அடிப்படையில் சிறப்பாகச் செய்து முடிப்பதற்கும் அது உதவுகின்றது." என மேலும் கூறினார்.

இலங்கையின் மக்கள் அதிக உள்ளுறையும் ஆற்றலுடையவர்களாக இருக்கின்றனர். ஆனால் இதை ஒளி வீச விட வேண்டும். நீண்டகாலமாக இழுபட்டுக் கொண்டிருக்கும் இன மோதலின் காரணமாக மக்கள் அனுபவிக்கும் பயம், தாக்குதலினால் ஏற்படும் அச்சுறுத்தல்கள் காரணமாக நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கான பிரமாண்டமான தேவை உள்ளதென அவர் நம்புகிறார்.

"மனித இனத்தின் மேம்பாட்டினது கலையும் தத்துவமும்" என்.எல்.பி. தான் என்பது அவருடைய கருத்தாகும். இது ஒரு கலையாகும் ஏனென்றால், அது மனித இனத்தின் தனித்துவமான ஆளுமை மற்றும் நாகரிக நடத்தையைக் கையாளுகின்றது. சாதாரண சொற்களாலோ அல்லது தொழில் நுணுக்கங்களாலோ அதை ஒரு போதும் முழுமையாக காப்பாற்றி விட முடியாது என அவர் நம்புகிறார். இது ஒரு தத்துவம். ஏனென்றால், ஏனைய விடயங்களுள் இது செயல்முறையும் செயல் ஒழுங்குமாகும். அவர்களுடைய வாழ்க்கைத்தரத்தை, மேம்படுத்துவதிலும் மகிழ்ச்சியை உருவாக்குவதிலும், மக்களின் சமூகக் கட்டமைப்பின் விளக்கம் மற்றும் நடத்தை மாதிரிகள் எவ்வளவு அசாதாரண பெறுபேறுகளைக் கொண்டு வரமுடியும் என்பதைக் கண்டுபிடிப்பதாகும்.

நனவுமனத்தை (Conscious mind) விடவும், மிக அதிகளவு தகவல்களைக் கையாள்கின்ற நனவிலி மனத்தை (Sub conscious) NLP தட்டிப் பார்க்கின்றது. நனவு மனம் ஒரு செக்கனுக்கு 20-40 மில்லியன் துண்டுத் தகவல்களை மாத்திரம் கையாள முடியும். இதற்கு மாறாக நனவிலி மனம் ஒரு செக்கனுக்கு 2 - 5 மில்லியன் துண்டுத் தகவல்களைக் கையாள முடியும். பெருமளவு பகுதி மனத்தினது உள்ளுறை சக்தி பயன்படுத்தப் படாமலிருக்கின்றது.

மனித அனுபவத்தில் ஈடுபாடு கொண்டுள்ள மூன்று முக்கிய பகுதிகளை NLP உள்ளடக்கியிருக்கின்றது என டாக்டர் நூட்ஸன் (Knu-dtzlon) கூறுகிறார். பார்த்தல், கேட்டல், உணர்தல், மணத்தல் மற்றும் சுவைத்தல் ஆகிய ஐந்து புலனுணர்வுகளை நரம்பியல் குறிப்பிடுகின்றது. புலனுணர்வுகள் மூலமாக நாங்கள் தகவல்களைப் பெற்று, எமது அனுபவங்களை வெவ்வேறு வழிகளில் சேமிக்கின்றோம். "வெளி உலகத்தின் அனுபவங்களின் உட்புறப் பிரதியொன்றை (Represeutation) நாங்கள் உருவாக்குகின்றோம்." என அவர் மேலும் விளக்கினார்.

"மொழி என்பது வாய்மொழி, (Verbal), அல்லது வாய்மொழியற்ற (Non-verbal) மொழியைக் குறிப்பிடுகின்றது. எண்ணங்கள் உள்ளக நிலையையும் செயல் முறைகளையும் வெளிப்படுத்துகின்றன. அதேவேளையில் நிகழ்ச்சித் திட்டமிடல் (Programming) என்பது எங்களுடைய நடத்தை, மனப்பாங்கு, செயற்பாடுகளைக் கருதுகின்றது.

"எங்களுடைய பிரதான விழுமியங்களும், பெறுமானங்களும் (values), நம்பிக்கைகளும், வாய்மூல மற்றும் வாய் மூலமற்ற மொழியிலும் தேர்ந்தெடுத்தல் (selecting) மற்றும் தேர்வு எங்களுடைய நடத்தை மற்றும் சுபாவங்களிலும், வேலையின் வகை, கூட்டாளிகள், பொருட்கள், கலந்துரையாடல்கள் (seminar) ஆகியவை உறவுகளிலும் வெளிப்படும். இதை நாங்கள் மீள் நிகழ்ச்சித் திட்டமிடல் எனக் கூறுகின்றோம். எங்களுடைய நிகழ்ச்சித் திட்டமிடலின் வழிமுறை, எங்களுடைய நடத்தை, மனப்பாங்கு மற்றும் செயற்பாடு என்பன இதில் அடங்கும். இந்த மீள் நிகழ்ச்சித் திட்டமிடலின் படி, நடத்தை, மனப்பாங்கு, செயற்பாடுகளின் திசை என்பன மிக வேறுபட்டவை என்பதை நீங்கள் காண முடியும். மக்களுடைய மொழியில் அவர்களுடன் கதைத்தல், அவர்களுடைய தீர்மானமெடுக்கும் வழிமுறையைப் புரிந்து கொள்ளல், தங்களையும் மற்றவர்களையும் ஊக்குவிக்கும் - அவர்களுடைய வழிமுறை ஆகியவற்றினால் நீங்கள் மிக இலகுவாக அவர்களுடன் தொடர்பை எற்படுத்தவும், தொடர்பைத் தொடர்ந்து பேணவும் முடியும். இவற்றைப் புரிந்து கொள்வதன் மூலம் தொடர்பாடலுக்குரிய கௌரவமான வழிமுறையை நீங்கள் சீர் செய்ய முடியும்.

பல்வேறு நோக்கங்களுக்கு NLPயைப் பயன்படுத்த முடியும். உதாரணமாகத் தொடர்பாடல் திறன்களை அது மேம்படுத்த முடியும் அல்லது புதிய தகவல்களை செயற்படுத்துவதை எளிமையாக்குவதன் மூலம் கற்றலைத் துரிதப்படுத்தி பெருமளவு கல்விசார் சாதனையை ஈட்டுவதற்கும் பங்களிப்புச் செய்யலாம்.

கட்புலநோக்கு (Visible) நுட்பங்களின் மூலம் விளையாட்டுச் செயற்பாடுகளைச் சீராக்குவதற்கும் அதைப் பயன்படுத்த முடியும். தங்களைத் தோல்வியாளர்களாகவன்றி வெற்றியீட்டுவோராக மனக்கண்ணால் பார்க்கும்படி பயிற்சியாளர்களுக்கு NLP கற்பித்து, நம்பிக்கையோடு சிந்திக்கச் செய்து, தடைகளை வெற்றி கொள்ள வசதியளிக்கின்றது. உண்மையில் பயத்திற்கு இதை ஒரு குணப்படுத்தல் முறையாகவோ சிகிச்சையாகவும் பயன்படுத்த முடியும். உதாரணமாக "காலத்தோடொட்டிய குணப்படுத்தல் முறை" (Time line Therapy) என்னும் NLP நுட்பத்தை குற்ற உணர்வைக் குறைப்பதற்குப் பயன்படுத்த முடியும். அது செயற்பாட்டை அடக்கும். காரணத்தைக் கண்டுபிடித்துப் பிரச்சினைக்கு ஈடு கொடுக்க இந்தக் குணப்படுத்தல் முறை உதவுகின்றது. மனித இனமென்ற முறையில் இலக்கு மேம்படுத்தலை NLPயும் வலியுறுத்துகின்றபடியால் பயிற்சியாளர்கள் குடும்பத்துடனும் சமூகத்துடனும் தமது உறவுகளைச் சீர் செய்ய முடியும்.




தனிப்பட்ட ஒருவர் அவனுடைய/அவளுடைய இலக்கில் சிந்தனையை குவியச் செய்வதும், அதை உணரச்செய்வதும், அவசியமானதென்றும் இலக்கை அடைவதற்கு அதில் ஈடுபாட்டையும் சக்தியையும் வைத்திருக்க வேண்டுமென்றும் டாக்டர் நூட்ஸன் கூறுகிறார். மக்களுக்கு ஒரு தெளிவையும் ஒரு சவாலையும் கொடுப்போமானால் அதில் வெற்றி பெறுவதற்கு அவர்கள் தங்களால் செய்யக்கூடியதை செய்வார்களௌன அவர் நம்புகிறார்.

ஒரு ஆஸ்த்துமா நோயாளியான பெண் டாக்டரை அவர் உதாரணமாகத் தந்தார். அவர் இனிமேலும் மருந்து எடுத்தலுக்குப் போக வேண்டிய தேவையில்லை. ஏனென்றால் சமூகத்திற்குச் சேவை செய்ய வேண்டுமென்ற ஆர்வம் அவளுடைய நோயைக் குறைத்துவிட்டது.

தனது வேலையாட்களிடையே மனித விழுமியங்களின் ஒரு சமநிலையைப் பேணுவதில் ஒரு நிறுவனம் வெற்றியீட்டுமானால் பின்பு அதன் கீழ் மட்டங் கூட சீரடையும் என அவர் நம்புகிறார்.

ஐக்கிய அமெரிக்காவிலுள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் 1970இல் NLP ஆரம்பிக்கப்பட்டது. மொழியியல் பேராசிரியர் டாக்டர் ஜோன் ஹிறின்டர், கணிதவியலாளர் டாக்டர் றிச்சார்ட் பான்ட்லர், ஆகியோரின் தொழிற்பாட்டினால் NLP தோன்றியது. வெற்றி பெற்ற தனிப்பட்டவர்கள் எவ்வாறு செயற்பட்டார்கள் என ஆராய்ச்சி மேற்கொள்ள அவர்கள் விரும்பினார்கள். இது அவர்களை இந்த வினாவிற்கு இட்டுச் சென்றது. "சாதாரணமானவர்களிலும் பார்க்க சிறப்பான முறையில் செயற்படுகின்ற மனிதர்களைப் பற்றி நாங்கள் ஆய்வு மேற்கொள்வோமானால் நாங்கள் எதைக் கண்டுபிடிப்போம்?"

மிகவும் சிறந்த தகவல் தொடர்பாளர், வர்த்தகர்கள், பேச்சாளர்கள் மற்றும் ஆசிரியர்களைப் பற்றி டாக்டர் ஹிறைண்டரும் டாக்டர் பான்ட்லரும் ஆய்வு மேற்கொண்டார்கள். ஒரு பொதுவான பகுதி எண்ணிலிருந்து அவர்கள் ஒரு பரந்த மாதிரியுருவை விருத்தி செய்தார்கள். விரும்பத்தகாத நடத்தை அதேபோல புதுமட்ட அடைவுகளின் விரைவான உற்பத்தி ஆகியவற்றில் மாறுபாட்டை செய்வதற்கு அது அனுமதிக்கும்.

டாக்டர் பான்ட்லரின் கீழ் கல்வி கற்ற டாக்டர் நூட்ஸன் கூறுகிறார். வெற்றி பெற்ற மனிதனிடம் தந்திரோபாயம், தன்னுணர்வு இழந்தநிலை (Rapport), நம்பிக்கை மற்றும் மனநிலை என்பன இருந்தன.

டாக்டர் நூட்ஸன் நரம்பியல் மொழி நிகழ்ச்சித் திட்டமிடல் சங்கத்தில் ஒரு உறுப்பினராவார். அவர் ஒரு சுதந்திரமான பத்திரிகையாளராக, பொது மருத்துவராக, சீன வைத்திய நிபுணராக (Aeupucturest) ஸ்பெயின் மற்றும் டென்மார்க்கில் தனிப்பட்ட வைத்திய ஆலோசனை வழங்குபவராகத் தொழில் செய்தார்.

தனிப்பட்ட கற்பித்தல் பயிற்சி, அழுத்தக் கட்டுப்பாடு, வாழ்க்கை முறைமாற்றம் ஆகிய பாணிகளையும் மேற்கொண்டார். NLP - Educare Europa என்ற நிறுவனத்துடன் இணைந்து தொழில் செய்கிறார்.

இந்த நிறுவனத்தின் நோக்கம் தனிப்பட்டவர்கள், நிறுவனங்கள் மற்றும் குழுக்கள் தனிப்பட்ட வளர்ச்சி அடைவதற்கும் அபிவிருத்தி மற்றும் மனித மேம்பாட்டை வெவ்வேறு நிகழ்ச்சிகளின் மூலம் அடைவதற்கும் உதவுதலாகும்.

மொழிபெயர்ப்பு:
செ.சிவசம்பு.

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | யாழ்ப்பாணம் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சுன்னாகம் | சங்கானை | பருத்தித்துறை | சாவகச்சேரி | கொடிகாமம் | நெல்லியடி | ஊர்காவற்றுறை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முருங்கைக்காய் | * | 30/- | 30/- | 35/- | 20/- | * | 40/- | 30/- | 10/- | * |
| வெங்காயம் | 60/- | 40/- | 50/- | 50/- | 55/- | 60/- | 60/- | 55/- | 55/- | 60/- |
| பச்சை மிளகாய் | 60/- | 40/- | 40/- | 45/- | 55/- | 60/- | 40/- | 50/- | 50/- | 80/- |
| கத்தரிக்காய் | 65/- | 60/- | 50/- | 75/- | 85/- | 65/- | 60/- | 50/- | 50/- | 80/- |
| பாவற்காய் | 45/- | 40/- | 80/- | 90/- | 40/- | 60/- | 100/- | 80/- | 70/- | 60/- |
| பயிற்றங்காய் | 55/- | 60/- | 50/- | 40/- | 40/- | 60/- | 60/- | 60/- | 40/- | 60/- |
| வெண்டி | 20/- | 25/- | 20/- | 20/- | * | 28/- | 30/- | 30/- | 20/- | 30/- |
| உருளைக்கிழங்கு | 60/- | 65/- | 70/- | 70/- | 70/- | 70/- | 70/- | 80/- | 80/- | 80/- |
| பீற்றூட் | 25/- | 12/- | 10/- | 20/- | 15/- | 20/- | 20/- | 20/- | 10/- | 20/- |
| கரட் | 60/- | 40/- | 30/- | 25/- | 40/- | 40/- | 60/- | 40/- | 40/- | 60/- |

# தேங்காய் உற்பத்தியைக் கூட்டுவதற்காக தென்னை மரங்களுக்கு உரமிடும் ஆலோசனை

எமது பிரதேசத்தில் மழைகாலமாகிய இவ்வேளையில் இளம், முதிர் தென்னைகளுக்கு சேதன அல்லது அசேதனப் பசளையிடுவது வளர்ச்சியையும், விளைவினையும் கூட்டுவதற்கு ஏதுவாக அமைகின்றது. எனவே, டிசம்பர் 2002 முடியுமுன்னர் தென்னைச் செய்கையாளர்கள் சேதன உரமாக மாட்டெரு, ஆட்டெரு, கோழி எரு கிளிரிசீடியா இலை அல்லது இப்பில் இப்பில் இலைகளையும், அசேதன உரமாக இளம் கன்றுக்கலவை - Young palm Mixture -Y.P.M. (அமோனியா - 500 கிராம், T.S.P. - 200 கிராம், மியூரியற் ஒவ் பொட்டாசு - 300 கிராம்), (முதிர் மரக்கலவையையும் Adult Palm Mixture- A.P.M (அமோனியா 1 1/2 கிலோ, T.S.P. - 1/4 கிலோ, மியூரியற் ஒவ் பொட்டாசு 1 1/4 கிலோ) பாவிக்கலாம். சிபார்சு செய்யப்பட்ட உரக்கலவைகள் நைதரசன், பொசுபரசு, பொட்டாசியம் ஆகிய மூன்று மகா தாவர போசணைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.



**தென்னைகளுக்கு சேதனப் பசளையிடல் முறை**

பாளை வந்த தென்னை மரங்கள் ஒவ்வொன்றிற்கும் உலர் மாட்டெருவாயின் 30 கிலோவும் அத்துடன் 400 கிராம் சப்போஸ் பொசுபேற்றும், 1 கிலோ மியூரியற் ஒவ் பொட்டாசும் கலந்து அடிமரத்திலிருந்து 3 அடி தூரத்தில் 3 அடி அகலமாக (அடி மரத்திலிருந்து 6 அடிக்கு உட்பட்டதாக) அரை அடி ஆழத்திற்கு மட்டும் சுற்றவர குழி வெட்டி அதற்குள் மேற் குறிப்பிட்ட கலவையை இடுதல் வேண்டும். பின்பு இதனை மண்ணால் மூடி, பசளை வட்டத்திற்குள் தென்னோலை அல்லது பனையோலையினால் மூடி பத்திரக் கலவையாக்கி விடலாம்.

**மாடுகளைத் தென்னை மரத்தில் கட்டுதல்**

தென்னையின் அடிமரத்தில் இருந்து 3 அடி தூரம் தள்ளி 3 அடி அகலமாக அரை அடி ஆழத்திற்கு குழியாக வெட்டி பசளைப் பாத்தி (Manvare Basin) ஏற்ப டுத்த வேண்டும். பின்பு, இரு மாடுகளை 10 இரவுகளுக்குத் தொடர்ந்து ஒரு மரத்தில் கட்ட வேண்டும். கட்டும்போது எல்லாக் கழிவுகளும் பசளைப் பாத்திக்குள் உறுதிப்படுத்தத் தக்க வகையில் மாடுகள் கட்டப்படல் வேண்டும். (6அடி நீளத்திற்கு மேற்பட்ட கயிற்றினால் பிணைத்தால் எதுவித பிரயோசனமுமில்லை)

இக்காலத்தின் பின்பு, 200 கிராம் சப்போஸ் பொசுபேற்றும், 750 கிராம் மியூரியற் ஒவ் பொட்டாசும் பாத்திக்குள் விசிறப்பட்டு மண்ணினால் மூடி விடுதல் வேண்டும். இம்முறையை வருடத்தில் மழைநேரம் ஒரு முறை செய்தால் போதுமானது.

**இளம் தென்னங்கன்றுகள், முதிர் தென்னைகளுக்கு செயற்கை உரம் இடும் முறை**

தென்னைகளில் நைதரசன் பற்றாக்குறையினால் எல்லா இலைகளும் வெளிறிய பசசையாகத் தோற்றமளிக்கும். பின்பு, மஞ்சள் நிறமாகத் தோற்றமளித்து, பின்பு சிவப்புக் கலந்த நரை நிறமாக மாறுகின்றது. இறுதியாக வட்டு படிப்படியாகச் சிறியதாகும்.

பொட்டாசியம் குறைபாட்டினால், சிற்றிலையின் நடுநரம்பில் (ஈர்க்கில்) இரு பக்கங்களிலும் துளை போன்ற புள்ளிகள் பரவலாகக் காணப்படும்.

எனவே, YPM, APM உரங்களை வருடா வருடம் தென்னைகளுக்கு இடுவதனால், மேற் குறிப்பிட்ட பற்றாக்குறை காணப்படாது, வளர்ச்சியையும் விளைவினையும் அதிகரிக்கச் செய்யலாம்.

**இளம் கன்றுகளுக்கு (இளம் மரக்கலவை) YPM உரம் இடுதல் முறை**

சாதாரணமாக 5 வருடங்களுக்கு உட்பட்ட பாளை வராத தென்னை களுக்கு YPM என்ற உரத்தினை 6 மாதங்களுக்கு ஒரு தடவை 500 கிராமிலிருந்து, 5 வயதுடைய தென்னைகளுக்கு (பாளை வராத) 1 1/2Kg வரை படிப்படியாக அதிகரித்து உரப்பிரயோகம் செய்யலாம். தென்னையின் அடியிலிருந்து 1/2 அடி தூரம் தள்ளி பசளை வட்டத்தின், அதா வது மண்ணைச் சாதாரணமாக 1/2 அடி ஆழம் வரை கொத்திப் பிரட்டி ஏற்படுத்தப்பட்ட சுற்று வட்டத்தினை படிப்படியாக அதி கரிக்கப்பட்டு பாளை வரும் நேரத்தில் 6 அடியாக இருத்தல் வேண்டும். இப்படிக் கொத்திப் பிரட்டிய பின்பு அதற்குள் தென்னையின் வயதிற்கேற்ப YPM உரத்தினை இடலாம். உரமிட்ட பகுதிக்கு மேலாக காய்ந்த தென்னோலை அல்லது பனையோலையினால் மூடிவிடலாம்.

**முதிர்ந்த தென்னைகளுக்கு APM உரமிடுதல் முறை**

மர அடியிலிருந்து 6 அடி தூரத்திற்கு மரத்தினைச் சுற்றியுள்ள முழு நிலப் பரப்பளவையும் 1/2 அடி ஆழத்திற்கு கொத்திப் பிரட்டிய பின்பு, 6 அடியில் வரம்பு ஒன்றினைச் சுற்றிவரக் கட்டிவிட்டு 6 அடி சுற்று வட்டப்பரப்பளவு முழுவதற்கும் 3 கிலோ APM உரத்தினைத் தூவி மண்ணுடன் கலந்துவிடலாம். மரத்தினைச் சுற்றி எக்காரணம் கொண்டும் குழி வெட்டி உரத்தினை போடக்கூடாது. களைகள் இருப்பின் களைகளை அகற்றிய பின்பு இச்செய்முறையை மேற்கொள்ள வேண்டும். பின்பு பசளை வட்டத்தினை தென்னோலை அல்லது பனையோலையினால் மூடி விடலாம். இப்படி வருடா வருடம் ஒரு தடவை உரப்பிரயோகம் செய்தால் தேங்காயின் விளைச்சலை அதிகரிக்கச் செய்யலாம்.

எனவே, தென்னைகளுக்கு உரம் இடுதல், ஈரப்பதனைக் காக்க தென்னைகளுக்கிடையில் பொச்சு மட்டைக்குழிகளை வெட்டுதல் போன்ற ஆலோசனைகளுக்கும், இதற்குரிய மானியத்தினைப் பெறவும் தென்னைச் செய்கையாளர்கள் நல்லூர், கமநல சேவை நிலையக் கட்டடத்தில் இயங்கும் தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் யாழ்.மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

**ஜெ.சத்தியேந்திரன்,**
*தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்.*

# யாழ்ப்பாணத்தில் கால் பதிக்கும் எற்கின் ஸ்பென்ஸ் நிறுவனம்



எற்கின் ஸ்பென்ஸ் (Aitken Spence) நிறுவனமானது, இலங்கையில் உள்ள நிறுவனங்களில் மிகவும் பழமை வாய்ந்த ஒன்றாகும். இது 1868ஆம் ஆண்டில் தோமஸ் கிளாக், பற்றிக் கோல்டன் ஸ்பென்ஸ் ஆகிய ஆங்கிலேயர்களால் காலியில் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இலங்கையின் தலைசிறந்த 10 நிறுவனங்களுள் (10 Top Companies) ஒன்றாக விளங்குகின்றது. கொழும்பில் வொக்ஷால் வீதியில் 11 மாடி வொக்ஷால் கோபுரத்தைத் தலைமையாகக் கொண்டு தனது கிளைகளை நாடெங்கிலும் பரப்பி உயர்ந்து நிற்கும் இந்த நிறுவனமானது, 50 இற்கும் மேற்பட்ட சேவை அமைப்புக்களைக் கொண்டு ஒரு தொகுதி நிறுவனமாகத் தொழிற்படுகின்றது.

இத்தகைய பெருமை மிக்க நிறுவனம், வடக்கில் சூழ்ந்திருந்த யுத்தமேகங்கள் கலைந்து சமாதானக் காற்று வீசும் இவ்வேளையில், யாழ். மக்களுக்குச் சேவையாற்றத் தனது இரு சேவை அலுவலகங்களை 139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் திறந்துள்ளது. அவற்றில் ஒன்று எற்கின் ஸ்பென்ஸ் ஓவசீஸ் ரவல் சேவிசஸ் பிறைவேற் லிமிட்டெட் மற்றையது ஏஸ் காகோ பிறைவேற் லிமிட்டெட் ஆகும்.

யாழ். மக்களின் உறவுகள் இன்று உலகின் அனைத்து நாடுகளிலும் வாழ்கின்றனர். ஆகவே அவர்கள் கல்வி, வேலைவாய்ப்பு, உல்லாசப்பயணம், மருத்துவம், வியாபாரம், உறவுகளைச் சந்தித்தல் போன்ற தேவைகளுக்காக வெளிநாடு செல்கின்றனர். இதற்காக விமானப் பயணச் சீட்டுக்களைப் பெறுவதற்குப் பல சிரமங்களின் மத்தியில் கொழும்பு சென்று வாடகை வீடுகளிலும், விடுதிகளிலும் பல நாட்களாகக் காத்திருந்து உயர்ந்த விலையில் விமானச் சீட்டுக்களைப் பெறுவது மட்டுமன்றி போலிப் பிரயாண முகவர்களால் ஏமாற்றப்பட்டு பணத்தை இழந்த சம்பவங்களும் அதிகமாக உள்ளன.


இத்தகைய குறைகளைப் போக்கவே எற்கின் ஸ்பென்ஸ் ஓவர்சீஸ் ரவல் சேவிசஸ் பிறைவேட் லிமிட்டெட் தனது அலுவலகத்தை யாழ். மண்ணில் திறந்துள்ளது.

இந்த நிறுவனத்தின் மூலம் உலகிலுள்ள எந்த நாட்டிற்கும் பயணம் செய்வதற்கான விமானச் சீட்டுக்களை (Air Tickets) குறைந்த கட்டணத்தில் விரைவாகப் பெற்றுக்கொள்ளலாம். மேலும் எந்த நாட்டிலும் தங்குவதற்கான விடுதி வசதிகள், போக்குவரத்து வசதிகள், உல்லாசப்பயண வசதிகள் மற்றும் Date Change, Reconfirmation போன்றவற்றுடன் ஐரோப்பிய நாடுகளில் புகையிரதத்தில் பயணம் செய்வதற்கான புகையிரச் சீட்டுக்களையும் ஸ்ரான்லி வீதியில் பெற்றுக்கொள்ளலாம்.

பொதுவாக வெளிநாட்டு தூதுவர் நிலையங்கள் (Foreign Embassies) பயணிகளிடம் Itinerary Letter கேட்பார்கள். Itinerary Letter என்பது பிரயாண விபரங்கள் (பயணம் செய்யும் விமானம், திகதி, நேரம், சென்றடையும் திகதி, நேரம்) தொடர்பாக பிரயாண முகவர்களால் உறுதிப்படுத்தி வழங்கும் கடிதமாகும். இங்கு நிறுவனத்திலுள்ள Amabeus on Line System தின் மூலம் பிரயாணப் பதிவுகளை (Booking) முன்கூட்டியே மேற்கொண்டு நிறுவனத்தால் வழங்கப்படும் Itinerary Letter ரைப்பெற்று கொழும்பு சென்று விரைவாகவும், சிரமங்கள் இன்றியும் Embassy களில் விசாவைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் உத்தியோகபூர்வமாகவும், குழுவாகவும் வெளிநாடு செல்வதற்கு வேண்டிய விசா வசதிகள் மற்றும் விசா பற்றிய ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றது.

ஏஸ் காகோ பிறைவேற் லிமிட்டெட் ஆனது சர்வதேச கூரியர் சேவையில் சரித்திரம் படைக்கும் TNT யின் இலங்கைக்கான முகவராகத் தொழிற்படுகின்றது. 200இற்கும் மேற்பட்ட நாடுகளில் 3,000 இற்கும் மேற்பட்ட அலுவலகங்களைக் கொண்டு ஒரு வலைப்பின்னலாக (Network) தொழிற்படும் TNT ஆனது யாழ். மண்ணிலும் தனது முகவரான ஏஸ் காகோவின் கிளை ஒன்றினைத் திறந்து விரைவான, பாதுகாப்பான, நம்பிக்கையான கூரியர் சேவையினை வழங்குகின்றது.

வர்த்தகத்துறை உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு கூரியர் சேவை (Courier Service) பற்றிய விளக்கம் பாடவிதானத்தில் (Syllabus) சேர்க்கப்பட்டுள்ளது. கூரியர் சேவையானது சாதாரண தபால் சேவையில் இருந்து வேறுபடுகின்றது. தபால் சேவையானது ஒரு கதவுச் (One Door) சேவையாகும். ஆனால் கூரியர் சேவையானது இரண்டு கதவுச் (Two Door) சேவையாகும் அதாவது பொதிகள் (parcels), காகிதங்களை அனுப்புபவரின் (Sender) வீட்டுக் கதவிலிருந்து கிடைக்கப் பெறுபவரின் (Receiver) வீட்டுக் கதவுக்கு மிக விரைவாகக் கொண்டு சென்று விநியோகித்தலாகும். ஆகவே இதனை Door to door Service என அழைப்பர். இச்சேவைக்கும் Computer On Line System பயன்படுத்தப்படுகிறது. அதாவது இங்கிருந்து பொதிகள், காகிதங்கள் அனுப்பப்படும்போது பல தரவுகள் (அனுப்புபவர்/பெறுபவரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், அனுப்பப்படும் பொருட்கள் பற்றிய விபரம்) உள்ளீடு (Type) செய்யப்படும். வெளி நாட்டுக்கு அவை சென்றடையும்போது அங்குள்ள TNT அலுவலகங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளது (திகதி, நேரம், பெற்றுக்கொண்டவர் பெயர்) என்பதை System தில் Update செய்யும் இதனை இங்கிருந்து பார்தது வாடிக்கையாளர்களுக்கு POD (Proof of Delivery) வழங்கப்படுகிறது.



இந்த இரண்டு நிறுவனங்களும் 139 ஆம் இலக்க கட்டடத்தின் முதலாம் மாடியில் (யூனியன் அஷ்யூரன்ஸ்க்கு மேல்) 222 3771 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தனது அலுவலகத்தை அமைத்து யாழ். மக்களுக்குத் தரமான சேவையினை வழங்கி வருகின்றது என்பது குறிப்பிடத் தக்கது.

**ஆ.டன்ஸ்ராஜ்**

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225108 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும் தம்மொடு
கொள்ளாத கொள்ளாது உலகு.
- திருக்குறள்.

# நமது நோக்கு

## வேண்டத்தகாத முயற்சி !

ஈழத்தமிழ் மக்களிடையே எவ்வித வேறுபாடுகளுமின்றி, அனைவரும் ஒன்றாய்த் திரண்டு நாம் தமிழ் மக்கள் என ஒன்றிணைந்து நிற்கும்போது, அநாவசியமான முரண்பாடுகளைத் தோற்றுவிக்க முனையும் நடவடிக்கைகள் பற்றி அனைவரும் மிகக் கவனமுடனும் எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டிய தேவையுள்ளது.

இந்த வகையில் - தமிழகத்தில் நடைமுறைக்கு வந்துள்ள மதமாற்றத் தடுப்புச் சட்டத்தை, இலங்கையிலும் கட்டம் கட்டமாகக் கொண்டு வருவதற்கு தீவிர முயற்சி மேற்கொள்ளப்படுவதான செய்தி நோக்கப்பட வேண்டியதாகின்றது.

தமிழகத்தில் மதஅடிப்படைவாதம் செல்வாக்குச் செலுத்தும் நிலையிலும், அரசியல் ஆதாய நோக்கிலும் உருவாக்கப்படும் சட்டத்தை-

-இலங்கையில் நடைமுறைக்கு கொண்டுவர வேண்டுமென்ற நிர்ப்பந்தமோ, தேவையோ எந்த வகையிலும் எழுந்திராதபோது, இவ்வாறான செய்த மக்கள் மத்தியில் வீண் குழப்பங்களையும், மனஸ்தாபங்களையுமே தோற்றுவிக்கக் கூடியதாகும்.

இங்கு கடந்த காலங்களிலும் சரி, இன்றும் சரி - மதமாற்றம் என்ற விடயம் பிரச்சினைக்குரிய விடயமாகவோ அல்லது அதனால் பிரச்சினைகள் ஏற்பட்டதாகவோ - சம்பவங்களோ, தாக்கமோ நிகழ்ந்திராத போது - இவ்வாறான சட்டத்தின் தேவை பற்றிச் சிந்திப்பதே அர்த்தமற்றது என்றே சொல்லலாம்.

இந்தியாவைப் பொறுத்த வரையில் - அங்குள்ள அரசியற் களத்தில் - மதம் ஓர் வாக்கு வங்கியாக மாற்றப்பட்டுள்ள சூழலில், மதரீதியான அடிப்படைவாத உணர்வுகள் ஆக்கிரமித்துள்ள நிலையில், மதச்சார்பின்மை என்ற விடயமே கேள்விக் குறியாகியுள்ள கட்டத்தில் - முற்றுமுழுதான அரசியல் உள் நோக்கத்தோடு கொண்டு வரப்பட்ட மத மாற்றத் தடுப்புச் சட்டத்தை - அங்குள்ள சிறுபான்மைச் சமூகங்களும், அரசியல் நீதியாளர்களும், அவதானிகளும் கடுமையாகக் கண்டித்து வரும் சூழலில்,

இலங்கையில் அவ்வாறான ஒரு சட்டத்தை அமுலாக்குவது என்ற பேச்சு எழ வேண்டியதன் அவசியம் என்னவென்பது தெரியாமல் உள்ளது.

இலங்கையில் - இந்து மதத்தைச் சேர்ந்தோர் பலவந்தமாக மதம் மாற்றப்படக்கூடிய எத்தகைய அழுத்தங்களோ அல்லது புறநிலைகளோ இங்கு நிலவி வருவதாக எவரும் குற்றச்சாட்டுக்களையோ, விமர்சனங்களையோ இதுவரை எழுப்பியிராத நிலையில் - இத்தகைய செய்திகள் வீணான குழப்பங்களையும் விவாதங்களையுமே உருவாக்கும் அபாயம் நிறைந்தவையாகவே காணப்படுகின்றன.

நீண்ட காலமாகப் போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான, அவசியமான நடவடிக்கைகள், உதவிகள் என்பன செய்யப்பட வேண்டியனவாய் ஏராளமாகக் காத்திருக்கின்ற போது-

தமிழ் மக்களின் அரசியல் இலக்குகள் வென்றெடுக்கப்படுவதற்கான தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற போது -

இவ்வாறு வீணான சிக்கல்களையும், விவாதங்களையும் தோற்றுவிப்பது - எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளப்பட முடியாத ஒன்றாகும்.

எனவே - சமூகப் பொறுப்புணர்வுகளையும், மதநல்லிணக்கத்தையும் கவனத்திற் கொண்டு, பொருத்தமற்ற இத்தகைய செயல்களில் மிக்க நிதானத்தைக் கடைப்பிடிப்பதே உரியவர்களுக்கு அழகானதாகும்.

### -அரியாலை - கொழும்புத்துறைப் பகுதியில்

# படையினர் வெளியேறிய போதும் மீளக் குடியமர அனுமதி மறுப்பு!

(அரியாலை)

கொழும்புத்துறை, அரியாலைப் பகுதிகளில் சில முகாம்களிலிருந்து இராணுவம் வெளியேறியபோதும் இப்பகுதியில் மக்கள் மீளக்குடியமரப் படையினர் தொடர்ந்தும் அனுமதி மறுத்து வருகின்றனர்.

இப்பகுதி மக்கள் இராணுவத்தினரை அணுகி தம்மை மீளக்குடியமர அனுமதிக்குமாறு கேட்டபோது மேல் அதிகாரிகளிடம் இருந்து தமக்கு எந்தவிதமான அறிவுறுத்தல்களும் வரவில்லை என இராணுவத்தினர் தரப்பால் கூறப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் இருந்து வெளியேறிய இராணுவத்தினர் இப்பகுதி வீட்டுத் தளபாடங்களையும் தம்முடன் எடுத்துச் செல்வதையும் நூறு மீற்றருக்கு அப்பால் தமது நிலைகளைப பலப்படுத்துவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.(55)

# புதிய இராணுவப் பேச்சாளரைத் தெரிய படையதிகாரிகள், பத்திரிகையாளர் குழு!

(கொழும்பு)

இராணுவப் பேச்சாளரைத் தெரிவு செய்வதற்காக-இம்முறை இராணுவ அதிகாரிகளையும், பத்திரிகை ஆசிரியர்களையும் கொண்ட குழுவொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளது.

இராணுவப் பேச்சாளராகவும், இராணுவத் தலைமையகத்தின் ஊடகப் பணிப்பாளராகவும் கடமையாற்றுபவரைத் தெரிவதற்காக பாதுகாப்பமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணாண்டோவினால் நியமிக்கப்பட்டுள்ள தெரிவுக் குழுவில்-

பாதுகாப்பமைச்சின் மேலதிக செயலாளர் கே.டபிள்யூ.ஈ. கரலியட்ட தலைமையில், மேஜர் ஜெனரல் லொஹான் குணவர்த்தன, தற்போதைய இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சனத் கருணாரட்ன, 'டெய்லி நியூஸ்' ஆசிரியர் அர்ஜுன ரணவன, 'லக்பிம' ஆசிரியர் கட்டில வெல்லபொட ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இதுவரை-இராணுவத் தலைமையகத்தினால் இராணுவப் பேச்சாளர் பதவிக்குத் தெரிவான கேணல் பியால் அபேசேகர, கேணல் சுமேத பெரேரா, கேணல் தயா ரட்ணாயக்க ஆகியோரை இக்குழு நேர்காணல் செய்துள்ளது.

தொடர்ந்து இன்னும் 8 அதிகாரிகள் இப்பதவிக்காக பரீட்சிக்கப்படவுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

# பிரச்சினைகளை தீர்க்கும் தலைமையை தேர்ந்தெடுக்கும் காலம் வந்துள்ளது



## -ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க

(கொழும்பு)

பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய சிறந்த தலைமைத்துவத்தை தேர்ந்தெடுக்கும் காலம் வந்துள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

பேராயர் மேதகு ஒஸ்வால்ட் தோமசை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்து உரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும், இன்றைய பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடிய சிறந்த தலைமைத்துவமே நாட்டுக்குத் தேவை. அதைத் தேர்ந்தெடுக்கும் காலம் வந்துள்ளது. சந்தர்ப்பவாத அரசியலுக்கு அப்பாற்பட்ட தலைவர்களே நாட்டின் இன்றைய தேவையாகும் எனவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அப்போது தெரிவித்துள்ளார். (01)

# உதவி வழங்கும் நாடுகளை திருப்திப்படுத்தும் பேச்சுக்கள்

## - விக்கிரமபாகு கருணாரட்ன கருத்து

(கொழும்பு நிருபர்)

புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் தாய்லாந்தில் நடந்து முடிந்த பேச்சுக்களால் அரசாங்கத்துக்கே பூரண திருப்தி ஏற்பட்டிருக்கின்றது. இலங்கைக்கு கடன் வழங்கும் நாடுகள், நிறுவனங்களைத் திருப்திப்படுத்துகின்ற அளவுக்கு இப்பேச்சுக்கள் இடம் பெற்றிருக்கின்றன-

என புதிய இடதுசாரி முன்னணியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கூட்டுச் செயலணிக்குப் பதிலாக புனர்வாழ்வு, புனரமைப்பை உள்ளடக்கியதான உபகுழுவை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இக்குழு எந்தளவுக்கு ஒத்திசைவாக உருப்படியாக செயற்படும் என்பது கேள்விக்குரியது.

இந்தப் பேச்சுக்கள் சிஹல உறுமயவுக்கும் பூரண திருப்தியாக அமைந்துவிட்டது எனலாம் என கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண மேலும் தெரிவித்துள்ளார்.

# ஜப்பானிய இராஜதந்திரி வன்னி செல்கிறார்

(கொழும்பு)

ஜப்பானின் சிரேஷ்ட இராஜதந்திரிகளுள் ஒருவரும், ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமான நடவடிக்கைகளுக்கான முன்னாள் பொதுச்செயலாளருமான யசுஷி அகாஷி இவ்வாரம் வன்னிக்குச் சென்று, விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்திக்கவுள்ளார்.

வன்னிக்குச் செல்லவுள்ளதாக திட்டமிடப்பட்டுள்ள ஜப்பானிய உயர்மட்டக் குழுவுடன், இவரும் இணைந்து கொள்வாரென்றும்-

நேரடியான தகவல்களைப் பெறுவதும், தன்னை அறிமுகம் செய்துகொள்வதற்குமான வாய்ப்பாகவும் இந்த விஜயத்தை அகாஷி பயன்படுத்துவாரென்றும் ஜப்பானியத் தூதரக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

# தென்கொரிய மாநாட்டுக்கு டிரோன் பெர்ணான்டோ செல்வார்

வெளிநாட்டமைச்சர் டிரோன் பெர்ணான்டோ உலக அமைச்சர்களின் மாநாட்டில் பங்கு பற்றுவதற்காக தென் கொரியா செல்லவுள்ளார். இந்த மாநாடு தென் கொரியாவில் சியோல் நகரத்தில் அடுத்த வாரம் இடம் பெறவிருக்கின்றது.

மூன்று நாள் நடைபெறும் இந்த மகாநாட்டில் 110 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ள இருக்கிறார்கள். அமெரிக்க வெளிநாட்டு அமைச்சர் கொலின் பவல், அவுஸ்திரேலிய வெளிநாட்டு அமைச்சர் உட்படப் பல பிரதிநிதிகள் இம் மாநாட்டுக்கு வருகை தரவுள்ளனர்.

மாநாட்டு முடிவில் கொழும்பு திரும்பும் வழியில் ஜப்பானுக்குச் செல்லும் வெளிநாட்டமைச்சர் டிரோன் பெர்ணாண்டோ, ஜப்பானிய வெளிவிவகார அமைச்சரையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

### - தீபாவளி தினத்தன்று -

# குழப்பம் விளைவித்தோருக்கு நீதிமன்றம் தண்டனை விதிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பஸ்நிலையப் பகுதியில் தீபாவளித்தினத்தன்று குழப்பம் விளைவித்தவர்களைப் பொலிசார் கைது செய்து யாழ். நீதிமன்றத்தின் முன் நிறுத்தினர்.

தம்பித்துரை சந்திரதாஸ் என்பவர் பொது இடங்களில் குழப்பம் விளைவித்ததை ஒப்புக் கொண்டமையினால் இவருக்கு இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறுமாத சிறைத்தண்டனையும் ஆயிரம் ரூபா தண்டப்பணமும் செலுத்துமாறு நீதவான் உத்தரவிட்டார்.

பொன்னுத்துரை சுவேந்திரன் என்பவருக்கு இரண்டு வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஆறுமாத சிறையும், இவர் சேதப்படுத்திய பேருந்துக்கு நஷ்டஈட்டுப்பணமாக 25ஆயிரம் ரூபா தண்டப்பணமும் செலுத்தும்படியும் நீதவான் உத்தரவிட்டார்.

குருநகரைச் சேர்ந்த தர்மராஜ் றெஜினோட் என்பவர் குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் இவரின் குற்றம் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டதனால் இவரை இரண்டாயிரம் ரூபா காசுப் பிணையிலும் 15ஆயிரம் ஆட் பிணையிலும் செல்ல நீதவான் அனுமதித்தார். (லி)

# பஸ் உரிமையாளர்கள் மீது தாக்குதல் மட்டக்களப்பில் தனியார் சேவை ஸ்தம்பிதம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் தமிழ்க்கட்சி ஒன்றிற்கு வரி செலுத்த மறுத்த இரு தனியார் பஸ் உரிமையாளர்கள் கடுமையாக தாக்கப்பட்டதில் காயமடைந்து மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தை கண்டித்து நேற்று முன்தினம் மட்டக்களப்பில் தனியார் பஸ் உரிமையாளர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். இதனால் தனியார் போக்குவரத்து ஸ்தம்பித்திருந்தது.

# தாய்லாந்து பேச்சுவார்த்தை குறித்து எதிர்க்கட்சி உயர்மட்டத்தில் ஆராய்வு!

(கொழும்பு)

தற்போதைய அரசியல் நிலைமை, வரவு - செலவுத்திட்டம் மற்றும் பல முக்கிய விவகாரங்களை ஆராய்வதற்காக சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு மற்றும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்றக் குழு என்பன நேற்றுமுன்தினம் கூடி ஆராய்ந்துள்ளன.

நேற்று முன்தினம் இரவு 7 மணி முதல் 10 மணிவரை பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் நடந்தது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில் இடம்பெற்ற, இந்தக் கூட்டத்தில் தாய்லாந்துப் பேச்சுக்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டதாக, கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் ஜனாதிபதியின் ஆலோசகரான லக்ஷ்மன் கதிர்காமா, தாய்லாந்து சமாதானப் பேச்சுகள் தொடர்பாக விளக்கமளித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணையை உடனடியாக விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளும்படி கோருவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இதேவேளை, ஜனாதிபதியின் தலைமையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயற்குழு கூட்டமும் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் கட்சியின் எதிர்கால நடவடிக்கைகள், விலைவாசி உயர்வு, சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளன.



# சமாதானச் சூழலுக்கு வழிவகுத்த அரசை வீழ்த்தும் எண்ணம் கூட்டமைப்புக்கு இல்லை

## விநாயகமூர்த்தி எம்.பி. தெரிவிப்பு

"இன்று ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலை போன்று எதிர்காலத்திலும் ஏற்படுமா என்பது சந்தேகத்திற்குரியது. ஆகவே, இன்று ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையை நாம என்ன விலை கொடுத்தாவது முன்னெடுக்க வேண்டும். இச்சூழ்நிலை மாறுவதற்கு ஒரு போதும் இடமளிக்கக்கூடாது."

இவ்வாறு கூறுகிறார் தமிழர் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி.

யாழ்.இந்துசமயப் பேரவையின் ஆதரவில் சமாதானம் நிலைக்க வேண்டி, தீபாவளி தினத்தன்று நடைபெற்ற பக்தி எழுச்சிப் பிரார்த்தனை நிகழ்வில் கலந்து, சமாதான தீபத்தை ஏற்றி வைத்துப் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

ஏழாலைச் சைவச் சிறுவர் இல்லத்தில் இடம்பெற்ற இப்பிரார்த்தனை நிகழ்வில் அவர் மேலும் பேசுகையில்:- சமாதானச் சூழ்நிலைக்கு வழிவகுத்த இன்றைய அரசை வீழ்த்தும் எண்ணம் கூட்டமைப்புக்கு இல்லையென்றும் - தமக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றாவிட்டால் அரசுக்கு அழுத்தம் - கொடுக்கத் தயங்கமாட்டோம் என்றும் குறிப்பிட்டார்.

தமிழர் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரியும் இந்நிகழ்வில் கலந்து சமாதான தீபத்தை ஏற்றி வைத்து உரை நிகழ்த்தினார். இந்து சமயப் பேரவைச் செயலாளர் சி.கலாபூஷணம் எஸ்.ஆர்.ஞானசுந்தரம் ஆகியோரும் உரையாற்றினர். (105)

# நிவாரண, புனர்வாழ்வு பணிக்கு புதிய குழுக்கள் அமையும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் நிவாரண, புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொளவதற்கு வசதியாக விசேட குழுக்கள் அமைக்கப்படவுள்ளன. 'நிவாரண, புனர்வாழ்வு நல்லிணக்கக்குழு' என்ற பெயரில் குடாநாட்டின் பல்வேறு மட்டங்களில் இக்குழுக்கள் அமைக்கப்படவுள்ளன. இவ்வாறான செயலணி தேசிய மட்டத்தில் ஏற்கனவே செயற்பட்டு வருகின்றது. தேசிய நல்லிணக்கச் செயலணி என்ற பெயரில் இதன் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

யாழ்.மாவட்டத்தில் உடனடியாக இவ்வாறான நல்லிணக்கச் செயலணியை அமைக்கும்படி, யாழ். அரசாங்க அதிபரிடம் தேசிய நல்லிணக்கச் செயலணி கேட்டுகொண்டுள்ளது. இதனைத் தொடர்ந்து குடாநாட்டில் பல்வேறு மட்டங்களிலும் இவ்வாறான செயலணிகளை உருவாக்குவதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட மட்டத்திலும் மற்றும் பிரதேச, கிராம மட்டங்களிலும் இவ்வாறான நிவாரண, புனர்வாழ்வு நல்லிணக்கச் செயலணிகள் உருவாக்கப்பட்டுள்ளன. இதற்கான பணிப்புரைகளை யாழ்.செயலகம் அனைத்துப் பிரதேச செய்லகங்களுக்கும் வழங்கியுள்ளது. இச்செயலணியில் குறிப்பிட்ட பகுதியின் பிரதேச செயலர் மற்றும் அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், கிராமிய, சமூக மட்டப் பிரதிநிதிகள், கிராம புனர்வாழ்வுக் குழுவின் பிரதிநிதி ஆகியோர் உட்படப் பலர் அங்கத்தவர்களாக இணைந்து செயற்படுவர். (க)

# மாநகரசபை ஊழியருக்கு சீருடைகள் தயார்!

(நமது நிருபர்)

யாழ். மாநகர ஊழியர்களுக்கு 2002ஆம் ஆண்டுக்கான சீருடைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப்பட்டு விட்டதாக மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இன்னும் சில நாட்களுக்குள் ஊழியர்களுக்கான சீருடைகள் அனைத்தும் வழங்கப்பட்டுவிடும் எனவும் தெரிய வருகின்றது. (13)

## தேசிய இளைஞர் சேவை மன்ற போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

(சுன்னாகம்)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் 2002-2003 ஆம் ஆண்டிற்கான பேச்சு, அறிவிப்பாளர், தனி நடிப்பு, குறுநாடக ஆக்கம், கட்டுரை, நடனம் ஆகிய போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புவோர் தமது எழுத்துருவிலான ஆக்கங்களையும், விண்ணப்பங்களையும் இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்னதாக அனுப்பி வைக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர். (87)

# யாழ். நூலக நிலையை மதிப்பிட யுனெஸ்கோ பிரதிநிதி வருவார்

(நமது நிருபர்)

யுனெஸ்கோ பிரதிநிதி பிரிதிஸ் ராஜ் யாழ்.நூலகத்துக்கு எதிர்வரும் 11ஆம் திகதி விஜயம் செய்யவுள்ளார்.

யாழ்.நூலகத்திற்குத் தேவையான உபகரணங்கள் தொடர்பான விபரங்களைத் திரட்டிக் கொள்வதற்காகவே இவர் புதுடில்லியில் இருந்து இங்கு வரவுள்ளார்.

பொது நூலகப் பகுதியில் எதிர்வரும் 11ஆம் திகதி மாலை 200 மணிக்கு நடைபெறவுள்ள கூட்டம் ஒன்றில் இவர் பங்குபற்றுவார் எனவும், தொடர்ந்து மூன்று நாட்கள் இங்கு தங்கியிருப்பார் எனவும் தெரிய வருகின்றது. (13)

## மத்திய கல்லூரி உயர்தர மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மத்திய கல்லூரியில் இவ்வருடம் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு இரண்டாம் தடவையாகத் தோற்றுவதற்கு விண்ணப்பித்த சகல மாணவர்களையும் இன்று காலை 10 மணிக்கு கல்லூரிக்குச் சமூகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

தொண்டமனாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் பொதுப் பரீட்சைக்கு இவர்கள் தோற்றவேண்டுமெனவும் கல்லூரி அதிபர் க.இராஜதுரை அறிவித்துள்ளார்.

# முதன்மைக் கல்வியியல் கல்லூரி நிகழ்ச்சித் திட்டச்செயலமர்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் எதிர்வரும் 9,10,11 ஆம் திகதிகளில் முதன்மைக் கல்வியியல் கல்லூரி நிகழ்ச்சித்திட்டச் செயலமர்வுகள் நடைபெறவுள்ளன.

கல்வி உயர் கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவனம், ஜி.ரி.சற் நிறுவன அதிகாரிகள் இச் செயலமர்வில் பங்குபற்றவுள்ளனர்.

இலங்கையில் உள்ள 17 தேசிய கல்வியியற் கல்லூரிகளில் முதற்கட்டமாக யாழ்ப்பாணம், றுகுணு ஆகிய தேசியக் கல்லூரிகளில் இச் செயலமர்வுகள் நடத்தப்பட்ட பின்னா முன்னைய கல்வியியற் கல்லூரிகளுக்கு இத்திட்டம் விஸ்தரிக்கப்படவுள்ளது. இச்செயல் திட்டத்தின் நோக்கம் பாடசாலைகளில் கல்வித்தரத்தினை உயர்த்துவது எனவும் யாழ்ப்பாண தேசியக் கல்வியற் கல்லூரி பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

# மருதங்கேணிப்பாலம் ஊடாக போக்குவரத்துக்கள் ஆரம்பம்

(சரசாலை)

மருதங்கேணி பாலத்தினூடாக வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

சேதமடைந்த நிலையில் காணப்பட்ட பாலத்தின் திருத்த வேலைகள் - கடந்த ஒருமாத காலமாக நடைபெற்றமையால் வடமராட்சி கிழக்குப் பகுதிக்குச் செல்லும் வாகனங்கள் தண்ணீர் குறைந்த பகுதியூடாகவே பயணஞ் செய்தமை குறிப்பிடத்தக்கது. (34)

# எங்கே போகிறோம்...?

- நேசன்.

## நாமாக நாம்...

சுதந்திரமான வாழ்வை, அமைதியான இருப்பை அவாவி நிற்பவர்கள் நாம். ஆக்கிரமிப்பும் தலையீடுகளுமில்லாத நம்முடையதேயான ஒரு விடுதலைபெற்ற வாழ்வின் எல்லையற்ற ஆனந்தமும் மகோன்னதமான உயர்வுமே எமது உள்ளக் கனவுகள்.

அத்தகைய வாழ்வை அமைப்பதற்கான தளத்தை உறுதிசெய்து கொண்டு நமது மொழியை, நமது கலாசாரத்தை, நமது பண்பாடுகளை, நமது கல்வியை முன்னெடுத்துச் செல்லவே நாம் அனைவரும் காலத்தின் நியாயமான தீர்ப்புக்காக காத்திருக்கின்றோம்.

அவ்வாறான வாழ்வு அமையும் பட்சத்தில் அதை ஏற்று நடத்தும் பக்குவமும் தகைமைகளும் நம்மிடம் உள்ளனவா? அவற்றை நாம் தேடிக்கொண்டுவிட்டோமா? அல்லது அவற்றை அடையும் பாதையில் தான் நாம் போய்க்கொண்டு இருக்கின்றோமா?

நமது அன்றாட வாழ்வில் நம்மை நாமாக அடையாளம் காட்டும் விதத்தில் நாம் நடந்து கொள்கின்றோமா? எமது ரசனை, எமது ருசிகள், எமது தேடல்கள், எமது தேட்டங்கள் இவையெல்லாம் எம்மை ஈழத்தமிழர்கள் என்று அடையாளம் காட்டுகின்றனவா?

எமது கலைகள், எமது இசை, எமது ஓவியம், எமது இலக்கியம், எமது பாடல்கள், எமது வாழ்வு முறைகள் என்பவை குறித்த பிரக்ஞை எம்மிடம் எவ்வளவு தூரம் உள்ளது. ~ ஏறத்தாழ மேற்சொன்ன எல்லா விடயங்களுக்கும் நாம் தென்னிந்தியாவைத்தான் சார்ந்திருக்கிறோமா? என்று எண்ணத்தோன்றுகின்றது. எமக்கே எமக்கென நாம் பாரம்பரிய வழியில் தேடிக்கொண்டுள்ளவைகளை ஒரு பொருட்டெனக் கொள்ளாத மனோபாவம் எம்மில் மிகப்பலரிடம் ஆழமாக வேரோடிக்கிடக்கிறது என்னும் உண்மை சிறிது கூர்ந்து நோக்கினால் புலப்படும்.

சாதாரணமாக எமது அன்றாட வாழ்வின் நடைமுறையையே நோக்குவோம்.

எல்லா வீடுகளிலும் வானொலி இசை கூட்டுகிறது. சில வீடுகளில் உச்சமாய் ஒலிநாடா ஊரை அழைக்கிறது.

மக்கள் சந்தோஷமாக, இயல்பாக இருக்கின்றார்கள் ~ சரிதான்.

இசை என்பது சினிமா இசைதானா? பாட்டென்பது சினிமா பாட்டுத்தானா? அந்த இசையும் சினிமாவும் கூட எம்முடையவையல்லவே...

தமிழில் அமைந்து கிடப்பதால் அவை நமதாகி விடுமோ...?

நம்மை அடையாளப்படுத்தும் மொழி அங்கு இல்லை ~ இசை அங்கு இல்லை, வாழ்க்கை முறை அங்கு இல்லை. அவை அயலவர் உடைமைகள்.

தென்னிந்திய சஞ்சிகைகளையும் புத்தகங்களையும் வாசிக்கின்ற~ அவற்றை மட்டுமே விரும்பி, தெரிந்து படிக்கின்ற ஒரு இளவயது நண்பர் அண்மையில் கூறினார்...

"எங்கட புத்தகங்களை, சஞ்சிகைகளை வாசிக்க ஒரு மாதிரிக் கிடக்கு. கொச்சையாப் பேசுகிற மாதிரியும் எழுதுகிற மாதிரியும் படுகுது. எப்பவுமே இந்தியப் புத்தகங்கள வாசிச்சுப் பழகினதால எங்கட உள்ளூர் எழுத்துக்களப் படிக்க முடியேல்ல... நாங்கள் இன்னும் சரியா முதிர்ச்சி அடையேல்லையோ எண்ட மாதிரிக் கிடக்கு...."

பாவம் அந்த நண்பர்~ இது அவருடைய பார்வை. இந்த அளவுக்கு தென்னிந்திய எழுத்துக்கள், புத்தகங்கள் அவரை மட்டுமா ஆக்கிரமித்துள்ளன... அவர் ஒரு வகை மாதிரி. அவ்வளவு தான்! இதற்காக முற்றுமுழுதாக நாம் தென்னிந்திய எழுத்துக்களை புறக்கணிப்பதென்பதோ, படிப்பதை நிறுத்திவிடுவதென்பதோ பொருளல்ல. அங்கிருந்து வரும் தரமான படைப்புக்கள் நிச்சயம் நமக்கு வேண்டும் ~ நம்மவர்கள் அவற்றைப் படிக்க வேண்டும் ~ தமிழின் வளர்ச்சிப் போக்கை இனம் கண்டு அதில் நமது பங்கு எத்தகையது என முடிவு செய்ய வேண்டும்.

ஆனால், அங்கிருந்து வரும் குப்பைகளை, சினிமாச் சிறுமைகளை, வேண்டாத விவகாரங்களையெல்லாம் தேடித்தேடிப் படித்து, துருவித்துருவி ஆராய்ந்து நாம் எதை ஈட்டிக்கொள்ளப் போகிறோம்!

இசை, சந்தோஷத்தின் அடையாளம் என்பது உண்மைதான் ~ ஆனால் நம்மவரின் கொண்டாட்டங்களில், திருமணச்சடங்குகளில், பூப்புனித நீராட்டு விழாக்களில் சினிமாப் பாடல்தான் காலங்காலமாக, இசையாக, சந்தோஷத்தின் ~ குதூகலத்தின் அடையாளமாக இருந்து வந்துள்ளது இருந்து வருகின்றது. போதாக்குறைக்கு எமது விழாக்கள் வீடியோ நாடாக்களில் பதிவாகும் போது பின்னணியாய் அமைவதும் இந்தப் பாடல்கள் தான். அதிலும் ஒரு பெருத்த வெட்கக்கேடு இரட்டை அர்த்தம் சொட்டும் விரசமான பாடல்களே பெரிதும் அலங்கார இசையாய் உபயோகப்படுகின்றன என்பதுதான்.

சில மாதங்களுக்கு முன் அண்மித்த கிராமம் ஒன்றில் புதிதாக ஒரு சந்தைக் கட்டடம் திறந்து வைக்கப்பட்ட வைபவம் இடம்பெற்றது. நமது நகரபிதா உட்பட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து சிறப்பிக்க இருந்தார்கள். வைபவம் தொடங்கிய கையுடனேயே 'ஆடுமேயுது....' என்ற பாடல் ஒலிபெருக்கியது ~ கேட்டுக்கொண்டிருந்த எனது நண்பருக்கும் எனக்கும் அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. ஒரு மங்களமான தொடக்க நிகழ்வில் மங்களமான ஒரு இசையை, ஒரு பாடலைக் கேட்கமுடியாமலிருப்பதே ஒரு சோகமல்லவா.

திருமண ஊர்வலத்தில் வாசிக்கப்படுகின்ற நாதஸ்வரத்தில் கூட 'ஓ...' போடுகிறார்கள். 'சும்மா சும்மா...' வருகிறது.

நாம் எப்போது மாறப்போகிறோம்?

எம்முடையதென்று சொல்லிக்கொள்ளும் விதமாக எம்மிடம் பாடல்கள் இல்லையா... இசை இல்லையா? சரி, அந்தந்த துறைசார இயங்கிக்கொண்டு இருக்கிறவர்கள் புதிதாக ஏதும் ஆக்கிக்கொள்ள முன்வரக்கூடாதா?

~ சினிமா சாரமல் பாட்டு வருகிற காலம் எப்போது வரும்.

மேற்குலகம்போல தமிழுலகில் ~ தமிழில் தனியான பாடல் இசைத்தட்டுகள், பாடல் தொகுப்புக்கள் இனியாவது வராதா...?

எமது வாழ்வைச் சொல்லும், எமது நாட்டின் மேன்மை சொல்லும் பாடல்கள் எமது பாடல்களாய் இசைக்கப்படமுடியாதா?

எமது சினிமாக்கள் என்று சொல்லும் விதமாய் அருமையான அந்த ஊடகத்தையுப் பயன்படுத்தி சிறந்த திரைப்படங்களைத் தரும் படங்களை நாமும் தயாரிக்க முடியதா...


சிறு அளவில் இப்போதுவரை கிடந்துள்ள அத்தகைய முயற்சிகளுக்காக நாம் சம்பந்தப்பட்டவர்களுக்கு மனமார நன்றி சொல்லுவோம்.

இனிமேலாவது நாமாக நாம் நம்மை அடையாளப்படுத்திக் கொள்ளக்கூடாதா... அதற்கான வேலை இன்னும் வரவில்லையா?

நாம் எங்கே போகிறோம் ?

- மீண்டும் சந்திப்போம்.

# அமெரிக்காவின் இடைத்தேர்தல் புஷ்ஷின் கட்சிக்கு அமோக வெற்றி



அமெரிக்காவில் நடந்து முடிவடைந்துள்ள இடைத் தேர்தலில் குடியரசுக்கட்சியினர் அமோக வெற்றியடைந்துள்ளனர். இத்தேர்தலின் மூலம் செனற் சபையிலும் பிரதிநிதிகள் சபையிலும் குடியரசுக்கட்சி தெளிவான பெரும்பான்மையைப் பெற்றுள்ளது.

இத்தேர்தலில் குடியரசுக்கட்சி அடைந்துள்ள வெற்றியானது ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷினது அதிகாரத் திட்டங்களுக்கும் வலுச்சேர்த்துள்ளதாக தெரியவருகின்றது. புஷ் நிர்வாகம் வரிகளைக் குறைப்பது, உள்நாட்டுப்பாதுகாப்புத்திட்டம் மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிரான சர்வதேச ரீதியான போர் போன்ற திட்டங்களை நிறைவேற்ற இத்தேர்தல் முடிவுகள் பக்கபலமாக இருக்குமென்று தெரியவருகின்றது.

நூறு அங்கத்தவர்களைக் கொண்ட செனற் சபையில் 51 ஆசனங்களை குடியரசுக்கட்சி வென்றுள்ளது. 46 ஆசனங்களை ஜனநாயகக் கட்சி வென்றுள்ளது. இன்னமும் இரண்டு ஆசனங்கள் பற்றிய முடிவுகள் வெளிவரவில்லை.

இந்நூற்றாண்டில் இடைக்காலத் தேர்தல் மூலம் இலாபம் அடைந்த மூன்றாவது ஜனாதிபதி புஷ் எனத் தெரியவருகின்றது. 1934ல் பிராங்ளின் ரூஸ்வெல்ற்றும் 1998ல் பில் கிளிங்டனும் இவ்வாறு இடைக்காலத் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

435 ஆசனங்களை கொண்ட பிரதிநிதிகள் சபையில் குடியரசுக் கட்சி 224 ஆசனங்களை வென்றுள்ளது. ஜனநாயகக் கட்சி 204 ஆசனங்களை பெற்றுள்ளது.

பொதுவாகப் பதவியிலிருக்கும் அரசாங்கம் இடைக்காலத் தேர்தலில் ஆசனங்களை இழப்பது வழக்கம். ஆனால், ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷினது சூறாவளித் தேர்தல் பிரச்சாரச் சுற்றுப்பயணம் வழமைக்கு மாறாக குடியரசுக்கட்சியினரை வெற்றி பெறச் செய்துள்ளதாக வெள்ளைமாளிகை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# ஆயுதங்கள் அனைத்தையும் ஒப்படைக்குமாறு கோரிக்கை

## பங்களாதேஷ் அரசு விடுத்தது



(டாக்கா)

பங்களாதேஷ் அரசாங்கம் இம்மாதம் 15ம் திகதிக்கு முன் மக்கள் வைத்திருக்கும் அனைத்துத துப்பாக்கிகளையும் தம்மிடம் ஒப்படைக்குமாறு கேட்டுள்ளது.

கிரிமினல் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில், அரசாங்க அனுமதிப்பத்திரம் இல்லாத துப்பாக்கிகள் மற்றும் அனைத்துச் சுடுகலன்களையும் மக்களிடம் இருந்து பறிமுதல் செய்யும் நடவடிக்கையில் பங்களாதேஷ் இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர்.

அண்மைக்காலங்களில் பங்களாதேஷில் இடம் பெற்ற வன்செயல்கள் காரணமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதிகள் 19 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இதையடுத்து பங்களாதேஷ் இராணுவத்தினர் இந்தியப் புலனாய்வுத் துறையினரின் உதவியையும் கோரியுள்ளனர்.

தற்போது எதிர்க்கட்சியாகவுள்ள அவாமி லீக் கட்சியின் தலைவி ஷேக் ஹசீனா, உடனடியாக தேர்தல் ஒன்றினை நடாத்துமாறு கோரியுள்ளார்.

பங்களாதேஷ் இராணுவத்தினரின் செயல் மற்றும் அங்கு பரவியுள்ள வன்செயல்கள் காரணமாக பதவியிலுள்ள அரசாங்கம் மரணப்படுக்கை நிலையை அடைந்திருப்பதாக ஷேக் ஹசீனா நேற்று டாக்காவில் பத்திரிகையாளர்கள் மத்தியில் கருததுத் தெரிவிக்கையில் கூறியுள்ளார்.

உலகவலம்

# பிரான்ஸ் ரயிலில் தீ விபத்து 12 பயணிகள் கருகி மாண்டனர்



(பாரிஸ்)

பிரான்சின் கிழக்கு நகரான நான்சியில் இரவு உறங்கலிருக்கை ரயில் வண்டி ஒன்றில் ஏற்பட்ட தீயினால் 12 பேர் கருகி மாண்டுள்ளனர். இறந்தவர்களில் ஐந்து பேர் பெண்கள், ஆறு பேர் ஆண்கள் மற்றும் ஒரு குழந்தையும் அடங்குவர். அதிகாலை வேளை ரயிலின் முன் பகுதியில் ஏற்பட்ட தீயினால் எழுந்த கடும் புகை மூட்டமே இவர்களின் இறப்பிற்கு காரணம் எனக் கூறப்படுகிறது.

அதிகாரிகளின் தகவலின்படி குறைந்தது நான்கு பேர் ஜேர்மன் பிரஜைகள் என்றும் ஐவர் அமெரிக்கர்கள் என்றும் தெரியவந்துள்ளது. ஒன்பது பேர் காயமடைந்துள்ள போதிலும் அவர்களில் எவரும் மோசமான நிலையில் இல்லை எனக் கூறப்படுகிறது.ரயிலில் பொருத்தப்பட்டிருந்த சூடாக்கல் கருவியில் எழுந்த தீப்பிழம்பே இவ் விபத்துக்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

நான்சி ரயில் நிலையத்தை ரயில் கடந்து சென்றபோது தீ பரவுவதைக் கண்ட நிலைய அதிகாரிகள் சாரதிக்கு அறிவித்ததைத் தொடர்ந்து ரயில் இடைநடுவில் நிறுத்தப்பட்டது. மீட்புப்படைகள் அங்கு விரைந்தபோதும் 12 பேரின் உயிரைக் காப்பாற்ற முடியாத நிலை ஏற்பட்டது. அங்கு முன்பகுதி பெட்டிகளில் 12 பேரின் சடலங்களையே மீட்கக்கூடியதாக இருந்தது.

சம்பவம் நடைபெற்ற போது ரயிலில் 150 பயணிகள் இருந்துள்ளனர். பாரிஸில் இருந்து ஒஸ்திரிய தலைநகர் வியன்னா நோக்கி இந்த ரயில் சென்று கொண்டிருந்தது. ஜேர்மனியில் தயாரான இந்த ரயில் பெட்டிகள் கம்பள விரிப்புக்களைக் கொண்டிருந்தமையே தீ பரவ ஏதுவாக அமைந்திருந்தது. இத்தகைய விபத்துக்கள் பிரான்சில் அசாதாரணமாகும். உலகில் அதிவேக ரயில் வலையமைப்பில் பிரான்ஸ் பிரபல்யமிக்க நாடு என்பதும் குறிப்பிடத்தக்கது.

# லக்ஸம்பேர்க் விமான விபத்து 17 ஜேர்மன் வர்த்தகர்கள் பலி

(லக்ஸம்பேர்க்)

லக்ஸம்பேர்க் விமான நிலையமருகே வோக்கர்-50 ரக விமானம் ஒன்று வீழ்ந்து நொருங்கியதில் 17 பேர் கொல்லப்பட்டனர். ஜேர்மனியிலிருந்து 19 பயணிகளுடனும் மூன்று சிப்பந்திகளுடனும் புறப்பட்ட விமானம், கடும் பனி மூட்டத்தினுள் சிக்கி லக்ஸம்பேர்க் காடு ஒன்றினுள் வீழ்ந்து நொருங்கியது. இவ்விபத்தில் ஐவர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டுள்ளனர். விமான சிதைவுகளினுள் இருந்து விமானி காயங்களுடன் இழுத்தெடுக்கப்பட்டார்.




விபத்துக்குள்ளான விமானம்



விமானத்தினுள் மீட்புப்பணி நடக்கிறது

இந்த விமானத்தில் வந்தவர்களில் அநேகமானோர் ஜேர்மன் வர்த்தகர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த விமானம் 1991 முதல் சேவையிலீடுபட்டு வந்தது.

# ஈராக் மீதான சோதனை மற்றுமோர் தீர்மானம் ஐ. நாவில்



(வொஷிங்டன்)

இரசாயன ஆயுதங்களை சதாம் ஹுசைன் வைத்திருப்பதாகக் கூறும் அமெரிக்க புஷ் நிர்வாகம், ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுதப் பரிசோதனையாளர்களை ஈராக்குக்குள் அனுப்புவது பற்றி புதிய கால அட்டவனையைத் தயாரித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் ஆயுதப் பரிசோதகர்களை ஈராக், தனது நாட்டுக்குள் அனுமதிக்காது விட்டால் அல்லது அவர்களுடன் ஒத்துழைக்காது விட்டால் ஈராக்குக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுப்பதாக அமெரிக்கா அறிவித்திருந்தது. எனினும் மேற்படி அமெரிக்காவின் தீர்மானத்தினை பிரான்ஸ் எதிர்த்துள்ளமை தெரிந்ததே.


உங்கள் அன்புச் செல்வங்களின்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

நமது ஈழநாட்டில்!

முற்றிலும் இலவசமாக!!

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின்
பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "நமது ஈழநாடும்" இணைகின்றது!
உங்களது சிறாரின் புகைப்படத்துடன்
கீழ்வரும் கூப்பன்களில் மூன்றினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள்!
உங்கள் செல்வத்தின் பிறந்த நாளன்று நமது ஈழநாடும்,
புகைப்படத்துடன் பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும்.

வாழ்க வளமுடன்!



சிறாரின் பெயர் :..........................................
முகவரி :..........................................
பிறந்த ஆண்டு :..........................................

கூப்பன்கள் மூன்றும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

..............................
பெற்றார் ஒப்பம்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பல்கலை விவசாய பீடம் மீண்டும் கிளிநொச்சிக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடம் மீண்டும் கிளிநொச்சிக்கு இட மாற்றம் செய்யப்படவுள்ளது.

ஆரம்பத்தில் கிளிநொச்சியில் இயங்கி வந்த விவசாய பீடம் அண்மைய வருடங்களாக யாழ்ப்பாணத்தில் இயங்கி வந்தது. ஏ-9 பாதை திறக்கப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி பீடம் கிளிநொச்சிக்கு விரைவில் இடமாற்றம் செய்யப்படவுள்ளது. (க)

COMPUTER ELECTRONIC SYSTEMS (PVT) LTD

- கணினியில் முன்னனுபவம் இல்லாதவர்களிற்கு தனிப்பட்ட முறையில் விசேட கவனம் செலுத்தப்படும்.
- சிறுவர்களிற்கான அறிமுக வகுப்புக்கள், games, மற்றும் விசேட வகுப்புக்கள்.

கணினி உலகில் முன்னணியில் திகழ இன்றே நாடுங்கள்!!

CES

விண்ணப்ப முடிவுத் திகதி:
15.12.2002

Computer Electronic Systems (Pvt) Ltd.
No.223,Kasthuriyar Road,
Jaffna.
(Opposide of J/Hindu Primary School)

## தாய்லாந்துப் பேச்சுக்களை கோபி அனான் வரவேற்பு!

தாய்லாந்தின் நொகன்பத்தம் நகரில் நடந்து முடிந்துள்ள அரச-புலிகள் தரப்புப் பிரதிநிதிகளுக்கிடையிலான இரண்டாவது கட்டப் பேச்சுக்களை ஐ.நா.செயலாளர் நாயகம் கோபி அனான் வரவேற்றுள்ளார்.

இரு தரப்பினருக்கும் இடையில் மேலும் பல சுற்றுப் பேச்சுக்கள் நடைபெறுவது, இலங்கையின் உள்நாட்டு மோதல்களுக்கு முடிவு கட்டி, நிலையான-நிரந்தரமான சமாதானத்துக்கு வழிவகுக்கும் வகையில், நான்கு நாட்கள் நடந்த பேச்சுக்களில் இரண்டு தரப்பினரும் பல இணக்கப்பாடுகளைக் கண்டுள்ளனர் என்றும்,

பெரும்பாலும் இந்த பேச்சுவார்த்தைகள்- உதவி சம்பந்தமான விடயங்களாக இருந்தன என்பதைக் கவனத்தில் கொள்ளும் போது ஆச்சரியம் தருவதாக இருந்தது என்றும் கோபி அனானின் பேச்சாளர் பிறெட் எகாட் தெரிவித்துள்ளார்.

### மாணவர் பொதுக்கூட்டம்

யாழ் பல்கலைக்கழக அனைத்துப பீட மாணவர்களுக்குமான கலந்துரையாடல் இன்று காலை 10 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

### மகனைப் பார்க்க...

தலையில் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஓட்டோ ஓட்டி வந்தவர் காயம் ஏதுமின்றி உயிர் தப்பிவிட்டார்.

சேதமடைந்த ஓட்டோவும் மோட்டார் சைக்கிளும் யாழ்.பொலிஸ் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. (லி)

### நீதிமன்றத் தீர்ப்பை..

கத்தையடைந்தது. இப்பேரணிக்கு பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சி.பாலசுப்பிரமணியம் தலைமை தாங்கினார்.

இறுதியில் மட்டக்களப்பு மேலதிக அரச அதிபர் வி.சண்முகத்திடம்-பிரதமர் ரணிலிடம் ஒப்படைப்பதற்கான மகஜர் ஒன்று கோட்டமுனை அபிவிருத்தி சங்கத்தலைவர் கயிலைநாதனால் கையளிக்கப்பட்டது.

இம்மகஜரில்- தற்போதுள்ள சமாதானச் சூழலில் உயர்நீதிமன்றத் தீர்ப்பு தமிழ் மக்களுக்குப் பெருத்த சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக அரசு பகிரங்கமாக மேற்படி வழக்கை வாபஸ் பெறுவதாக அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டிருந்தது.

### யாழ்.மாவட்ட ...

தீர்மானித்துள்ளன.

இவ்வாறான கம்பனிகளுக்கு தொழிலாளர்களை வழங்கவும், ஏனைய அரச, தனியார் நிறுவனங்களுக்கு ஊழியர்களை வழங்கவும் யாழ். தொழில் திணைக்களம் தயாராகி வருகின்றது. இதற்காக யாழ். மாவட்டத்தில் உள்ள வேலையற்ற, பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட இளைஞர், யுவதிகளின் விபரங்கள் திரட்டப்படவுள்ளன. பதவி வெற்றிடம் ஏற்படும் போது இக்கம்பனிகளுக்கு பொருத்தமா ன விண்ணப்பதாரிகள் நியமனத்துக்காக அனுப்பி வைக்கப்படுவர். (க)

### தமிழ்ச்செல்வன்..

திலிருந்து விமானப்படையின் விசேட உலங்குவானூர்தி மூலமாக இவர்கள் காலை 8.45 மணியளவில் புறப்பட்டுச் சென்றனர்.

நேற்றுக்காலை 10 மணியளவில் இவர்கள் புதுக்குடியிருப்பு மாலதி விளையாட்டரங்கை வந்தடைந்தனர். இவர்களை விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர் வே.பாலகுமாரன், காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன், நீதி நிர்வாகத் துறைப் பொறுப்பாளர் பரா மற்றும் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் மற்றும் போராளிகள் அங்கு வைத்து வரவேற்றனர்.

முன்னதாக புலிகள் தரப்புப் பிரதிநிதிகள் நேற்று முன்தினம் நள்ளிரவு தாய்லாந்திலிருந்து கொழும்பு திரும்பினர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், மூத்த தளபதி கேணல் கருணா மற்றும் மூன்று விடுதலைப் புலிகளே கட்டுநாயக்கா விமான நிலையத்தை நேற்று முன் தினம் நள்ளிரவு 11.45 மணியளவில் வந்தடைந்தனர்.

பின்னர் இவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அருகில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கு தங்க வைக்கப்பட்டனர். இவர்கள் தங்யிருந்த ஹோட்டலுக்குப் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

கட்டுநாயக்காவில் வந்திறங்கிய புலிகளின் பிரதிநிதிகள் குழுவைச் சந்திப்பதற்கு ஊடகவியலாளர்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. (01)

### நாளைய...

பூர்வமாக கலந்து கொள்ளுமாறு ஒன்றியம் கேட்டுள்ளது.

தீவக மக்கள் நலன்காப்பகம், மனித நேய அமைப்புக்களின் ஒன்றியம், சர்வதேச இந்து குருமார் ஒன்றியம் என்பன நாளைய பேரணிக்கு ஆதரவு தெரிவித்து அறிக்கைகளை விடுத்துள்ளன.

## அரச ஊழியர்களுக்கு...

கமிஷனின் சிபார்சை பாராளுமன்றமே தீர்மானிக்கும். எனினும், அதன் சிபார்சு மீளாய்வு செய்யப்படவேண்டிய ஒன்று என நிதியமைச்சர் குறிப்பிட்டார்.

### ஓய்வூதியத்திட்டம் மாற்றம், நியமனங்கள்இல்லை

புதிதாக அரச சேவையில் இணைவோருக்கு புதிய ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது.இத்திட்டத்தின்படி அரச ஊழியர்கள் தமது சம்பளத்தில் எட்டு வீதத்தை ஓய்வூதியத்துக்காக வைப்பில் இடவேண்டும். அரசாங்கம் பன்னிரண்டு வீதத்தை வைப்பிலிடும். இவ்வாறு இடப்படும் பணம் பின்னர் ஓய்வூதியமாக வழங்கப்படும். புதிய வரவு செலவுத் திட்டத்தின்படி இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் புதிய அரச நியமனங்கள் எதுவும் உடனடியாக வழங்கப்படமாட்டாது எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

### பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டில் மாற்றமில்லை

கடந்த ஆண்டைப் போலவே இம்முறையும் பாதுகாப்புச் செலவுக்காக புதிய வரவு செலவுத்திட்டத்தில் அதிகளவு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

கடனாகப் பெற்றுக்கொண்ட ஆயுதங்களுக்காக அதிகளவு பணம் செலுத்த வேண்டியுள்ளதாலும், அதிக எண்ணிக்கையான ஆயுதப்படையினரைப் பராமரிக்க வேண்டியுள்ளதாலும் அதிகளவு நிதி ஒதுக்கீடு அவசியம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வங்கிகளுக்கும் பெறுமதி சேர் வரி (வற்)

வங்கிகளுக்கு புதிய வரி விதிப்பு அமுலாகிறது. புதிய வரவு செலவுத்திட்டத்தின்படி வங்கிகளுக்கும் மற்றும் நிதிநிறுவனங்களுக்கும் 'வற்' வரி விதிக்கப்பட்டுள்ளது. 2003 யூன் மாதம் முதல் இது அமுல் செய்யப்படவுள்ளது.

அத்துடன் மதுபானங்கள் மீதான வரியும் உயர்த்தப்பட்டுள்ளது.

### ஆண்டுதோறும் வாகனங்களுக்கு புதிய வரி

வாகனங்களுக்கு புதிய வரி அமுலாகவுள்ளது. இதன்படி ஜனவரி முதலாம் திகதி முதல் வாகன அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்கும் போது இந்த அறவீடு விதிக்கப்படும். இதில் மோட்டார் சைக்கிள்கள், ஓட்டோ போன்றவற்றிற்கு 250 ரூபாவும் ஏனைய வாகனங்களுக்கு 100 ரூபாவும் வருடாந்த வரியாக அறவிடப்படும்

30 ஆசனங்களைக் கொண்ட பயணிகள் வாகனங்களுக்கு 1000 ரூபாவும் 30 ஆசனங்களுக்கு மேற்பட்ட பயணிகள் வாகன்ங்களுக்கு 1600 ரூபாவும் அறவிடப்படும். இந் நிதி மூலம் வீதி நிதியம் என்ற புதியதோர் நிதியம் அரசினால் ஆரம்பிக்கப்படுகிறது.

### எம்.பிக்களுக்கான நிதி ஒதுக்கீடு அதிகரிப்பு

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நிதி ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது. இதுவரை முப்பத்தைந்து இலட்சமாக இருந்த இவ் ஒதுக்கீடு புதிய வரவு செலவுத்திட்டத்தின்படி ஐம்பது இலட்சமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

### கம்பனிகள் மீது வரிக்குறைப்பு

கம்பனிகள் மீதான வரி புதிய வரவு செலவுத்திட்டத்தின்படி குறைக்கப்பட்டுள்ளது. இதுவரை முப்பத்தைந்து சதவீதமாக இருந்த மேற்படி வரி முப்பது சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. (01)

யாழ்.மாவட்ட
சனசமூக நிலையங்களுக்கு
நமது ஈழநாட்டின்
இலவசப் பிரதிகள்!

யாழ்.மாவட்டத்திலுள்ள 50 சனசமூக நிலையங்களுக்கு
'நமது ஈழநாடு'
ஒரு மாதகாலத்திற்கு இலவசப்பிரதிகளை அனுப்பவுள்ளது.

நீங்கள் செய்ய வேண்டியது இதுதான்

கீழுள்ள கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எதிர்வரும் 15.11.2002 ற்கு முன்னதாக
'நமது ஈழநாடு' -
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

* குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் 50 சனசமூக நிலையங்களின் விபரம் 17ஆம் திகதிய நமது ஈழநாட்டில் வெளியாகும்.
* தேர்ந்தெடுக்கப்படும் சனசமூக நிலையங்களுக்கு வரும் 20.11.2002 இலிருந்து 20.12.2002 வரை இலவசப் பிரதிகள் அனுப்பி வைக்கப்படும்.

நமது ஈழநாடு இலவசப் பிரதித் திட்டம்

சனசமூக நிலையத்தின் பெயர் : ..............................
பதிவு இலக்கம் : ..............................
முகவரி : ..............................
நூல் நிலைய வசதி : உண்டு / இல்லை
இலவசப்பிரதியை பெறக்கூடிய அருகிலுள்ள 'நமது ஈழநாடு' பத்திரிகை முகவர்
: ..............................

.............................. ..............................
தலைவர்/ செயலாளர் ஒப்பம்

### நாணய மாற்று விகிதம்

இலங்கை மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தினால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலாவணிகளுக்கான நாணய மாற்று விகிதங்கள் தொடர்பான விபரம் வருமாறு-

| | கொள்வனவு விலை (ரூ.ச) | விற்பனை விலை (ரூ.ச) |
|---|---|---|
| 1அமெரிக்க டொலர் | 96.13 | 96.59 |
| 1ஸ்ரேலிங் பவுண் | 149.71 | 151.04. |
| 1யூரோ | 95.70 | 96.82 |
| 1சுவிஸ் பிராங் | 65.31 | 66.33 |
| 1அவுஸ்ரேலிய டொலர் | 53.51 | 54.49 |
| 1ஜப்பானிய யென் | 00.78 | 00.79 |
| 1சவூதி றியால் | 25.70 | 25.70 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 07.11.2002 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.